உ

இலங்கைத்

தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்

# திரு. ஆ. தியாகராசா

எம். ஏ., எம். லிட்.

அவர்கள்

# மணி விழா மலர்

# A. THIAGARAJAH

M. A., M. Litt.

M. P. FOR VADDUKODDAI, SRI LANKA

# DIAMOND JUBILEE SOUVENIR

1976-04-17

மணிவிழாச் செயற்குழு, வட்டுக்கோட்டை.

Diamond Jubilee Celebration Committee, Vaddukoddai.

உ

இலங்கைத் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்

# திரு. ஆ. தியாகராசா

எம். ஏ., எம். லிட்.

அவர்கள்

# மணி விழா மலர்

# A. THIAGARAJAH

M. A., M. Litt.

M. P. FOR VADDUKODDAI

## DIAMOND JUBILEE

# SOUVENIR

சுபமங்கள நள ஆண்டு சித்திரைத் திங்கள் 5-ஆம் நாள்

1976-04-17

வெளியீடு:

மணிவிழாச் செயற்குழு,

வட்டுக்கோட்டை.



அன்பன் நீ அறிவன் நீ
இன்பன் நீ இனியன் நீ
பண்பன் நீ மனைவியொடும்
பல்லாண்டு வாழியரே.



# கடவுள் வாழ்த்து

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத்(து) அயனோடு மாலுங் காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

## திருவாசகம்

இரந்திரந் துருக என்மனத் துள்ளே
எழுகின்ற சோதியே இமையோர்
சிரந்தனிற் பொலியுங் கமலச் சேவடியாய்
திருப்பெருந் துறையுறை சிவனே
நிரந்த ஆகாயம் நீர்நிலம் தீகால்
ஆயவை அல்லையாய் ஆங்கே
கரந்ததோர் உருவே களித்தனன் உன்னைக்
கண்ணுறக் கண்டு கொண்டின்றே.

## பெரிய புராணம்

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

திருச்சிற்றம்பலம்

# சமர்ப்பணம்

வட்டுக்
கோட்டைத்
தொகுதித் தேசிய
அரசுப் பேரவை
உறுப்பினர் திரு.
ஆறுமுகம் தியாக
ராசா அவர்கள் எல்
லாப் பேறுகளும் எய்தி
அறுபது அகவை
நிறைந்து மணிவிழாக்
காணுகின்றார்கள். மணி
விழாவின் போது விழா
நாயகரையும் நாயகியையும்
ஒன்பது திரவியங்களைப்
பூரித்து நிறைத்து வைத்த
புனித நீரினால் அபிடேகித்துப்
புத்தாடை புனைவித்துப் பொன்
னாண் பொருத்தி அம்மையப்பராகக்
கண்டு மண்ணில் நல்ல வண்ணம்
வாழ்கென வாழ்த்துதல் பண்டைப்
பெரியோர்
கண்ட மரபா
கும். மகிழ்ச்சி
மிக்க இவ்
வின்பவேளை
யிலே மணி
விழாக் குழு
வினோம் வட்
டுக் கோட்
டைத்தொகுதி
வாழ் தமிழ்ப்
பெருமக்கள்
சார்பில், சிந்
தாமணி சூடிக்
குண்டலம்
புனைந்து வளை
செறித்து
மேகலை வீக்
கிச் சிலம்ப
ணிந்து திருக்
குறளாஞ் செங்
கோலேந்திய
செந்தமிழ்ச்
செல்வியின்
சேவடியில்
இவ்வண்ண
மலரினை
சமர்ப்பிக்கின்றோம்.




"கண்ணுதலாய் காட்டாக்கால்
காண்பார் யாரே"



எல்லாம் இறைவன் திருவுள்ளப் பாங்கில் இயல்வன என்பதில் அசையாத நம்பிக்கை
யுடைய ஐயன் மனைவியாருடன பாராளுமன்ற உறுப்பினரானதும் இறைவனுக்கு
நன்றிவணக்கம் செலுத்துகின்றார்

"கற்றாரைக் கற்றாரே காமுறுவர்"



வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக் கலைப்பூங்காவில் கல்வி அமைச்சர் காயிதே மில்லத், கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்களுடன்.

"நவில் தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு"



நயனுறு நெஞ்சினர் நண்பர் இருவர்.

வட்டுக்கோட்டைத் தொகுதித் தேசியப் பேரவை உறுப்பினர்

## திரு. ஆ. தியாகராசா எம். ஏ., எம். லிட்; அவர்கள்

# மணிவிழா வாழ்த்து.

— பண்டிதர் க மயில்வாகனனார் —

திணை: பாடாண் துறை: வாழ்த்தியல்.

உலகுபுகழ் காரைமகன் உயர்தவத்தின்
பயனாய்வந் துதித்த செம்மால்
உலவுமிசைத் தியாகேச குலமகளாம்
மகேஸ்வரியார் கொழுந நீயும்,
இலகுகலை மகளோடு திருமகளும்
விறன்மகளும் ஏவல் கேட்ப,
நிலவுலகிற் பல்லாண்டு உயர்பணிகள்
நெடிதியற்றி வாழி வாழி.

எண்ணமெலாம் மக்கணலம்; இசைப்பதெலாம்
பொருள்வளத்தின் ஏற்றம்; பின்னும்
வண்ணமுறு செய்கையெலாம் வளமோங்கிப்
பிறர்வாழும் வழியே யானால்
அண்ணலுன்போற் பிறர்வாழ அயர்வின்றிப்
பணிபுரிய வல்லார் ஆரே!
மண்ணின்மிசைத் தியாகேச மலைவிளக்காய்ப்
பல்லாண்டு வாழி வாழி.

ஈழமெங்கள் தாய்நாடு ஈங்கெவரும்
அடிமையில்லை என்று செப்பி
ஏழைசெல்வர் என்றிசைக்கும் ஏற்றத்தாழ்
வேதுமிங்கே இல்லை யாக்கி
வாழ்வினிலே புதுயுகத்தைக் கண்டுமக்கள்
வானவர்போல் இன்பம் எய்தத்
தாழ்வில்லா வகைமுயலுந் தனித்தலைவ
நெடிதோங்கி வாழி வாழி.

பகடோம்பி உழுதொழிலால் உலகூட்டும்
பழந்தமிழர் பண்பில் நின்றோய்,
தகவினொடுந் தேசியப் பேரவையின்
உறுப்பினனாய் உழைக்குஞ் சான்றோய்,
இகவாது யார்கண்ணும் இனியனவே
புரிதந்திங் கின்பங் காண்போய்,
சகமீதிற் பல்லாண்டு மனையோடும்
மகாரோடும் தலைவ! வாழி.

ஊக்கமிக உரனோடும் ஓய்வின்றி
உணர்வீந்தே உறுதி நல்கி
ஆக்கமிக நின்றுறுதி வாழ்வார்க்கு
அறிவுதவி ஆண்மை தந்து
காச்குபெங்கள் காவலனே! கலைமுகிலே!
கற்பகமே! கரவில் லாதோய்
விக்குபுகழ் மணிவிழவு கண்டுவந்தோய்
வேணியனார் அருளால் வாழி.

உ

குருபாதம்

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்,


ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாத தேசிக

ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

வழங்கிய

# ஆசியுரை

திரு. ஆ. தியாகராசா அவர்களுக்கு, வட்டுக் கோட்டைத் தொகுதியினர், மாண்புடன் "மணி விழா" எடுப்பது மகிழ்ச்சிக்குரியது. திரு. தியாகராசா, சிறந்த சமூகத் தொண்டர், சிறந்த இசைஞானி, சிறந்த பக்தியுள்ளம் படைத்த பண்பாளர், சமூகத்திற்கும் சமயத்திற்கும் சேவை செய்யும் உள்ளத்துடிப்பு உள்ள உத்தமர். குழந்தை உள்ளம்; எல்லோருடனும் கலந்து பழகும் பண்பு ஆகிய நலன்கள் அமைந்த திரு. தியாகராசாவுக்கு, எல்லா நலன்களும் கிடைக்கவும், நீண்ட ஆயுளும், பெருவாழ்வும் பெறவும் உளமாரப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.



உ

சிவமயம்

இலங்கை மெய்கண்டார் ஆதீனம்

ஸ்ரீமத் ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள்

வழங்கிய

# ஆசியுரை

இலங்கைத் தேசிய அரசுப் பேரவை உறுப்பினரும், சைவாசார சீலரும், உத்தமரும் ஆகிய ஸ்ரீ தியாகராசா எம். ஏ., எம்; லிட்., அவர்கள் தாமும், தமது சமூதாயமும் வாழ்வில் எல்லா வகைகளிலும் நிறைவு கண்டு அமைதி பெற்று இன்ப வாழ்வு வாழவேண்டும் என்று அவாவுகின்றவர்கள். அன்னாரின் அறுபதாண்டு நிறைவை முன்னிட்டு வெளியாகும் மலருக்கு ஆசியுரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். மணிவிழாச் செயற்குழுவினரின் சேவையைப் பாராட்டுகின்றேன்.

ஸ்ரீ தியாகராசா அவர்கள் நாட்டின் நலன் ஓங்கவும் மக்கள் மனமாண்பு வளர்ச்சியுறவும் இடையறாது முயலும் உத்தமர். வாழ்வின் மறுமலர்ச்சிக்காக அயராது உழைத்து வரும் பெருமகனுக்கு விழா எடுப்பதும், மலர் வெளியிடுவதும் பெரிதும் போற்றற்பாலனவே; ஸ்ரீ தியாகராசா அவர்களுக்கும், குடும்பத்தாருக்கும் எல்லா நலன்களும் பெருகவேண்டுமென்று வாழ்த்துவதோடு மேலும் பொதுப்பணிகளில் முன்னின்றுழைத்து வெற்றிகாண எல்லாச் சிறப்புக்களையும் உதவ வேண்டுமென்று அம்மையப்பன் திருவடிகளை இறைஞ்சுகின்றேன்;

# மணிவிழா வாழ்த்து

— சைவமணி, வித்துவான் மு. சபாரத்தினம் —

(தலைவர் மீனாட்சியம்பாள் ஆலய பரிபாலன சபை சாவகச்சேரி

ஆசிரியப் பெருந்தகையே அறிவை எந்நன்
மாசுதனை நீக்கிய நல்லொளியே, உங்கள்
வீசுபுகழ் மணிவிழாவின் மாண்பு தன்னைப்
பேசுகின்ற பெரும்பேற்றைப் பெற்றேன் இன்றே
தேசுறுநம் பேரவையில் பெருமை பெற்றுத்
தீதகல ஆட்சிசெயும் திறமை கண்டு
காசினியோர் புகழ்கின்ற பேச்சுக் கேட்டு
களிவோடு பாராட்டக் கடமைப்பட்டேன்

ஆடாத பெருமலையின் மாண்பும், ஆழம்
அளவிட்டுச் சொல்லொணாக் கடலின் வீறும்,
வாடாத மலர்முல்லைப் பூவின் மாண்பும்,
வளையாத செந்தமிழ்ச் பெருமைப் பாங்கும்
கோடாத செங்கோலின் செம்மைப் பண்பும்,
குவியாத தமிழ் மக்கள் வீரவாழ்வும்,
தேடாதே ஓரிடத்தில் காண வேண்டில்
தியாக ராசா எம்மெதிரில் நிற்பார் என்றும்.

முறையான இல்லறத்தில் வாழும் பாங்கும்
முனைப்பில்லாப் பண்பாடும் தெய்வப் பொன்னை
குறையாத மனப்பாங்கும் இனப்பற்றும்
குளிர்சைவ நெறிவாழ ஆற்றுந் தொண்டும்
பிறையாக வளர்ந்தோங்கும் பெருமை யாவும்
பீடுறுக, மேன்மேலும் சிறக்க வென்றே
கரையாத அன்பாலே மணிவிழாக்கொள்
கற்பகத்தை வாழ்த்துகின்றேன், கடமை வாழ்க.

## வாழ்க நீடூழி!

—நாவேந்தன்—

செம்மை மனத்தான் தண்ணளியான்
சிறிய தெதுவும் நினையாதான்
நம்பனடிகள் நித நினைந்தே
நாளுந் தொண்டு நயக்கின்றோன்
வெம்மை மனத்தார் என்சொலினும்
வெற்றி தொடர மிளிர்கின்றோன்
செம்பொனுள்ளத் தியாகனெனும்
செம்மல் வாழ்க நீடூழி.

# Message

I have great pleasure in sending this Message for publication in the Many Vizha Souvenir to be published to felicitate Mr. A. Thiyagarajah, Member of the National State Assembly for Vaddukodai on the occasion of his 60th birthday.

Before entering the hurly burly of politics Mr. Thiyagarajah built up a fine reputation as a teacher. Born on April 17th, 1916 Mr. Thiyagarajah was educated in Malaya, Jaffna and Madras. He obtained his M. A. Degree in Economics and the M. Litt Degree from Madras University.

Mr. Thiyagarajah was a Teacher from 1941 and retired from that profession in 1970 as a Super-grade Principal to contest the 1970 General Election. Mr. Thiyagarajah's book "E c o n o m i c Development of Ceylon' written with special reference to industrilization is familiar to teachers and students alike. Mr. Thiyagarajah has also published several phamplets during the Second World War on the need for independence for Sri Lanka, and appeared before the Soulbury Commission to state his case for independence. As a Member of the National State Assembly Mr. Thiyagarajah is very punctual and hardly ever misses a sittings day. His contributions in Parliament have the hall-mark of the scholar. He presents his case with a great deal of persuasion, which is hard to resist. On this occasion I wish Mr. Thiyagarajah very many more years in Parliament in the service of his people and nation.

***Maithripala Senanayeke***
*Minister of Irrigation, Power and Highways and Leader of the National State Assembly.*

The Secretariat,
Colombo - 1
7-4-76

# ஆசிச்செய்தி

மக்கள் பாராட்டுக்குரிய என் நண்பரும், சகதேசியப் பேரவை யுறுப்பினருமான திரு. ஆ. தியாகராசா அவர்கள் சலிப்பின்றி, அயர்வின்றி மக்கள் சேவைக்கே தமது நேரம் முழுவதையும் அர்ப்பணித்துத் தொண்டாற்றி வருவதை நட்டறியும். இவரோடு நெருங்கிப் பழகிய யான் இவர் தூய்மையும், நேர்மையும், காருணியமும் படைத்த பெருமகன் என்பதை அறிந்துகொண்டேன்.

இவருடைய சேவை பல திறப்பட்டது. ஆசிரியராய், அதிபராய், கண்ணியம் கடமை கட்டுப்பாடு என்பவற்றுடன் நடந்து காரை இந்துக் கல்லூரியை வளர்த்தார் முன்பெல்லாம் இவரை மரியாதையாகப் "பிறின்சிப்பல்" என்றே அழைப்பார்கள் தேசியப் பேரவை யுறுப்பினராக இருக்கும் இக்காலத்திலும் எல்லோரும் "பிறின்சிப்பல்" என்றே அழைக்கின்றார்கள்; இந்த விழாவை மணிவிழா என்று அழைப்பதிலும் "பிறின்சிப்பல்" விழா என்று அழைப்பது பொருத்தமாக இருக்கும். யான் யாழ்ப்பாணப் பெரும்பாக அரசியலதிகாரியாக நியமிக்கப்பெற்ற காலம்முதல், நண்பன் தியாகராசா பன்முகப்படுத்தப்பட்ட செலவுத் திட்டப் பணத்திலிருந்து அதிக பணத்தைப் பெற்றுத் தமது தொகுதிக்கு முன்பு ஒருகாலமும் இல்லாத வகையில் பல சாதனைகளைச் சாதித்துச் சேவை புரிந்து வருகிறார், தமது தொகுதியைச் சிறந்த முறையில் வளர்க்க இன்றும் பல்வேறு திட்டங்களை வைத்துக்கொண்டிருக்கிறார். மக்கள் துயரம் துடைக்கவும். கிராமங்களைச் சிறப்பாக வளர்க்கவும் ஏழைகளின் வாழ்க்கையை உயர்த்தவும், 'சோசலிசத்தை' நிலைநாட்டவும் திடங்கொண்டு செயற்பட்டு வரும் அவருக்கு மணிவிழா எடுப்பது சாலச் சிறந்தது. ஆகவே அவர் பல்லாண்டு காலம் வாழ்ந்து தமது அபிலாசைகளுக் கேற்பத் தமது தொகுதிக்குத் திருப்திகரமான முறையில் சேவை செய்ய மக்களின் அன்பும் ஆதரவும் தொடர்ந்தும் இருக்கவேண்டு மென்று கேட்டு நான் வழிபடு கடவுளாகிய முருகப் பெருமானை நினைந்து வாழ்த்துகின்றேன்;

சி. அருளம்பலம்
வடமாநில அரசியலதிகாரியும்
நல்லூர்த் தொகுதித் தேசியப் பேரவை உறுப்பினரும்

தேசிய அரசுப் பேரவை,
கொழும்பு.
76-04-10.

# Message

Mr. A. Thiyagarajah was a recognized educationist. Now he is an accepted politician. Political differnces have made him a controversial figure in Jaffna politics. But his honesty, integrity and straight forward conduct are generally appreciated.

He likes his constituency and his constituency likes him because he has done much for it sometimes against heavy odds.

On his 60th b'day we wish him all happiness and continued success.

**C. X. Martin**
*M. P. - Jaffna*

National State Assembly.
Colombo. 4-4-76

# ஆசிச்செய்தி

திரு: ஆ. தியாகராசா அவர்கள் வடமாகாணத்தில் உள்ள ஒரு பெருங்கல்வி மான்; சமூக சேவையாளர்; இவர் தேசிய அரசுப் பேரவையில் அங்கத்தவராக இருப்பதையிட்டு நான் பெருமையடைகின்றேன். வட்டுக்கோட்டை மக்கள் செய்த பெரும் பாக்கியந்தான் ஒரு பெருமகன், அவர்கள் பிரதிநிதியாகத் தேசிய அரசுப் பேரவையில் இருப்பது:

உண்மையில் யான் நெருங்கிப் பழகிய பின் அவர் தமிழ் மக்களின் பிரச்சினைகளில் மட்டுமன்றித் தமிழ் பேசும் மக்களான முஸ்லிங்கள், இந்திய வமிசாவழியினர் பிரச்சினைகளிலும் அக்கறை பூண்டு பாடுபட்டு வருகிறார்கள் என்பது தெரியவந்தது.

அறுபதாண்டு மணிவிழாவின் போது எனது வாழ்த்துக்களை மட்டுமன்றித் தமிழ் பேசும் மக்களின் வாழ்த்துக்களையும், மன்னூர்ப் பெருங்குடி மக்களின் வாழ்த்துக்களையும் ஒருங்கு சேர்த்து மேலும் பல்லாண்டு நேர்மையுடனும், கண்ணியத்துடனும் ஒழுக்கத்துடனும் நின்று மாபெருஞ் சேவையை மக்களுக்கும், ஈழநாட்டிற்கும் செய்து வாழ்ந்து வர எல்லாம் வல்ல இறைவனைப் பணிந்து வாழ்த்துகின்றேன்.

**ஹனிப் எஸ். ஏ. இரஹீம்**
*மன்னூர்த் தொகுதித் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்*

தேசிய அரசுப் பேரவை,
கொழும்பு.

# பல்லாண்டு வாழ்க!

— திரு. சோ. அருணாசலம் அவர்கள் —
(வடமேற்கு உதவி அரசாங்க அதிபர்)

இன்றைய சமுதாயம் பெரிதும் வேண்டிநிற்பது நாற்பொருளையும் நனிபெறுவதற்கு வழிகாட்டவல்ல தன்னலங்கருதாத் தலைவர்களையே. அத்தகைய தலைவர் ஒவ்வொரு நாட்டிலும் ஒருசிலரே காணப்படுகின்றனர். அவர்களுள் எங்கள் தியாகராசா அவர்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவர் என்றால் மிகையாகாது. அவர்பால் உள்ள சிறப்பியல்புகள் அவரைக் கண்ட மாத்திரத்திலேயே எவர்க்கும் புலனாகும். அகத்திருந்தெழும் அன்பும் ஆராத ஆர்வமும் பொங்கித் ததும்பும் புன்னகை பூத்த முகத்தினராய் என்றுங் காணப்படுவார். அவர் உடுப்பது வெண்துகில், உண்பது தூய உணவு. உள்ளுவதெல்லாம் உயர்ந்தனவே. உள்ளித் தெள்ளிய சொல்லினொடு நல்லனவே செய்வர். நினைவிலும் வாக்கிலும் செயலிலும் ஒத்தவராய் இடையறா நல்லொழுக்கத்தினால் விழுப்பம் மிக்க விறலுடையவர். கல்வியின் பல துறைகளிலும் பட்டங்கள் பல பெற்றதோடு "அறன் அறிந்து மூத்த அறிவினராய்" திறனறிந்து தீதின்றி வந்த செல்வத்தைக் கொண்டு நல்லறம் ஓம்பி நன்னெறி வழுவாது "பகுத்துண்டு பல்லுயிரோம்பி" இசைபட வாழ்பவர். "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற குறிக்கோள் கொண்டு நல்லார் தீயாரென்று எல்லோரிடத்தும் அன்பு பூண்டு "தம் என்பும் பிறர்க்குரிமையாக்கி" பொதுநலப்பணியில் ஈடுபட்டு அரசியலுக்கு ஓர் அணிகலமென விளங்குகின்றார். அரசியல்வாதிகள் இன்று கையாளும் ராசதந்திரம் முதலியவற்றைப் புறக்கணித்து மகாத்மாகாந்தியின் அடிச்சுவட்டில் சத்தியத்தை அடிப்படையாகக் கொண்டு இந்நாட்டில் சமதர்மத்தை நிலைநாட்ட, மனம், மொழி மெய்யால் அல்லும் பகலும் அயராது உழைத்து வருகின்றார். இன்றைய பொருளாதார சமூகச் சீர்கேடுகளை நீக்கி மக்கள் துயர் தீர்க்கச் சமதர்மமே (Democrat c Socialism) ஒரே வழி என்பது அவரது முடிந்த முடிபாகும்.

தனது உயர்ந்த இலட்சியத்தை நிறைவேற்றுவதில் அவர் காட்டும் ஊக்கமும் ஆக்கமும் ஆர்வமும் உரைக்கடங்கா. எண்ணிய எண்ணியாங்கெய்தும் திண்ணியராகிய அவர் எத்தனை இடுக்கண் வரினும் அஞ்சாது நின்று தன் கருமத்தை முடிக்குந் திண்மையர். "ஊழி பெயரினுந் தாம் பெயரார்" என்ற மொழிக்கொப்பத் தம் உயிர்க்கு ஊறு வந்த காலையும் தம் நிலையில் நின்று பெயரமாட்டார். நற்சால்புகளனைத்தும் தன்னிடம் கொண்ட இப்பெரியார், மாந்தருக்கு மருந்தனையர். இவர்போன்ற பண்புடையார் வாழ்வதனால் தான் மக்கள் வழிவழி வளர்ந்து வருகிறார்கள்; இதனையே பொய்யாமொழித் திருவள்ளுவரும் "பண்புடையார்ப் பட்டுண்டுலகம் அதுவின்றேல் மண்புக்கு மாய்வது மன்" என்று கூறிப்போந்தார்.

எனவே அவரது அறுபதாம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாக வெளியிடப்படும் இம்மலருக்கு இப்பாராட்டுரை வரைவதில் நான் பெருமையும், பெருமகிழ்ச்சியுமடைகிறேன். இப்பெரியார் பல்லாண்டு பல்லாண்டு காலம் வாழ்ந்து தொண்டுபுரிய வேண்டும் என்று இறைவனை வழுத்துகின்றேன்.

"நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை"

# கல்வித் தெளிவும் தேசபக்தியும் தியாகமும் வாய்ந்தவர்

-- திரு. வ. பொன்னம்பலம் எம். ஏ., ஜே. பி. அவர்கள் —
(தலைவர், மல்லாகம் கிராமாட்சி மன்றம்)

திரு. ஆ. தியாகராஜா அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி கொடுப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி.

இப்பெரியாரை 1956 முதல் அறிந்து பழகி இவருடன் சேர்ந்து பொதுப்பணி செய்யும் பேற்றைப் பெற்றேன்.

இவரின் கல்வித் தெளிவும், தேசபக்தியும், தியாகமும் என்னைப் பெரிதும் கவர்ந்தன.

60 ஆண்டுகளில் பயனுள்ள கல்வித் தொண்டும், தேசத் தொண்டும் செய்து வெற்றிவிழா எடுக்கும் இவருக்கும் இவரது பணியில் பங்கு கொள்ளும் பாரியாருக்கும் எனது நல்வாழ்த்துக்கள்.

# தன்னையுந் தன்னலங்களையும் ஒறுத்த தகுதியாளன்.

— திரு. நா. சபாரத்தினம் பி. ஏ. அவர்கள் —
(முன்னைநாள் அதிபர் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்)

புகழ் பூத்த வட்டுக்கோட்டைத் தொகுதித் தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் திரு. ஆ. தியாகராசா அவர்களுக்கு அத்தொகுதியினர் மணிவிழா எடுப்பது மிகவும் பொருத்தமானது; பாராட்டற்குரியது.

முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகத் திரு. தியாகராசாவுடன் தொடர்பு கொண்ட பெருமை எமக்குண்டு. எனவே அவருடைய பண்புகளையும் பொதுப் பணிகளையும் யான் நன்கறிவேன். கல்வித்துறையில் இவர் ஆற்றிய சேவை, அத்தொகுதிமக்களின் கவனத்தை ஈர்த்திருந்தமையால் இவர் பாராளுமன்ற உறுப்பினராவதற்கு அஃதுறுதுணையாக இருந்தது. இப்பணி தேசிய — பொதுப்பணியாக இன்று வியாபித்திருப்பதை எவரும் ஆட்சேபிக்க மாட்டார்கள்.

அரசியல் விவகாரங்களில் கருத்து வேறுபாடுகள் நிலவுவது இயற்கை. அவ்வேற்றுமைகளை ஒருபுறம் வைத்து, திரு. தியாகராசாவின் பொதுநலச் சேவையைச் சமத்துவ புத்தியுடன் நோக்குவோமாகில் அவர் ஓரிலட்சிய புருடர் என்ற உண்மை புலப்படும்.

திரு. தியாகராசாவைச் சந்திக்கும் போதெல்லாம் அவருடைய சிந்தை, சொல், செயல் ஆகியவற்றின் மூலம் அவர் தேசப்பற்றும் பொது நல உணர்வும் நிறைந்த செயல் வீரன் என்பதை நாம் உணரக் கூடியதாக இருக்கின்றது.

தன்னையும் தன்னலங்களையும் ஒறுத்து, இலட்சியத்தை வளர்ப்பதற்கு வாழ்கின்ற திரு. தியாகராசா அவர்களையும் அவர்களுடைய குடும்பத்தையும் எல்லாம் வல்ல திண்ணைபுரச் சுந்தரேசரும் சௌந்தராம்பிகையும், நற்சுகத்துடன் சீராய் வைத்து மேன்மேலும் சமூகத்திற்குத் தொண்டு புரிய அருள் செய்வாராக.

# இலட்சிய புருஷர்.

—திரு. எஸ். நிற்சிங்கம் அவர்கள்—

(வட்டுக்கோட்டைக் கிராமசபைத் தலைவர்)

உயர்திரு. ஆ. தியாகராசா எம். ஏ. எம் லிற் அவர்களுக்கு.
ஐயா,

தங்களுடன் அன்னியோன்னியமாய்ப் பழகும் வாய்ப்புப்பெற்ற நாம், தேசிய அரசுப்பேரவை உறுப்பினராக இருந்து தாங்கள் நிறைவேற்றிய செயற்றிட்டங்களைப் பெருமிதத்துடன் நோக்குகின்றோம்; தாங்கள் ஆற்றிய தொகுதி அபிவிருத்தி வேலைகளுக்கு அரசியலாரால் தங்களுக்கு வழங்கப்பட்ட உதவிபோல், எவரும் பெற்றவரல்லரென்ப. தொகுதியின் நல்லெதிர்காலத்தை உருவாக்க விவேக வழியில் திட்டம் வகுத்தும், அதேநேரத்தில் நாம் வதியும் தொகுதியை நிரந்தரமான அழகுமிளிரும் இடமாய் நிருமாணிக்க மக்களை ஊக்குவித்தும் சேவையாற்றும் தங்களைப்போன்ற ஒருவரைக் காண்பது அபூர்வம் என்று கூறுவதில் உண்மையுண்டு.

கடந்த ஆண்டுகளில் தாங்கள் அயராது ஆற்றிய ஆக்கவேலைகளுக்கு மக்கள் மனமுவந்து அன்புடன் சொரியும் நன்மதிப்பைக் கண்டு தாங்கள் புளகாங்கிதம் கொள்ளாதிருக்கமுடியுமா?

என்னைப் பொறுத்தவரையில் தங்களுடன் பழகும் வாய்ப்பும், தங்கள் லட்சியப் புருஷார்த்துவம் தூண்டும் செல்வாக்கின் உணர்வும் எனக்கு அளவிலா மகிழ்ச்சியை அளிக்கும்;

தாங்கள் பிறந்த இப்பொன்னாளில் எனது மனங்கனிந்த பாராட்டையும் ஆசியையும் கூறித் தங்கள் இலட்சியங்கள் இனிது நிறைவேறப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றேன்.

# எங்கள் அதிபர்

**— திரு. எஸ். ஆர். எஸ். தேவதாசன் B. A. —**

காரைநகர் இந்துக் கல்லூரி அதிபர் திரு ஆ. தியாகராசா கடந்த 28 ஆண்டுகளாக இக்கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றிய பின் இன்று ஒய்வு பெறுகிறார். திரு. ஆ. தியாகராசா அவர்கள் இந்துக்கல்லூரியின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் அரும் பெருந் தொண்டுகள் செய்துள்ளார். இன்று காரைநகர் மக்கள் பெருங் கல்விமான்களாகவும், பெரிய அரசாங்க பதவிகள் வகிப்பவர்களாகவும் பிரபல வியாபார முதலாளிகளாகவும் விளங்குவதற்கு இவரே முக்கிய காரணமாவார். அநேகமாகக் காரைநகர் மக்களில் இவரிடம் கல்வி பயிலாதவர் எவருமே கிடையாது என்று துணிந்து சொல்லலாம். எல்லோரும் இவரை அன்புடன் அதிபர் என்றே அழைப்பார்கள்.

காரைநகர் இந்துக்கல்லூரியில் சயம்பு உபாத்தியாயருக்குப் பின் அதிக காலம் தொடர்ச்சியாக அதிபர் பதவி வகித்தவர் திரு. தியாகராசா அவர்கள் தான். மலாயாவிலும் பின் இந்தியாவிலும் உயர்தரக் கல்வி பயின்று எம். ஏ. பட்டமும் பின் இலக்கியத்தில் விசேட பட்டமும் பெற்றபின் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரியத்தொடங்கினர். பின்னர் மிகவிரைவில் இக்கல்லூரியின் அதிபரானர். கடந்த இருபத்தெட்டு ஆண்டுகளாக இக்கல்லூரியின் முதல்வராகக் கடமையாற்றிப் பெரிய அளவில் கல்லூரிக்கட்டிடத்தை நிர்மாணித்துக் கட்டியதோடு அல்லாது விஞ்ஞான ஆய்வு கூடத்தைச் சகல வசதிகளோடு விரிவுபடுத்தியும், கல்லூரியை முதலாந்தர அந்தஸ்துக்கும் உயர்த்தியுமுள்ளார். காலஞ் சென்ற உயர் நீதிபதி திரு. கே. வி. நடராசா அவர்களின் ஞாபகமாக ''நடராசா மண்டபத்தை'' உருவாக்கியுள்ளார். இவர்காலத்தில்தான் இந்துக்கல்லூரி தனது வைரவிழாவை 1950 ஆம் ஆண்டு மிகவும் கோலாகலமாகக் கொண்டாடியது. இதை இன்றும் காரைவாழ் மக்கள் மறக்கவே மாட்டார்கள்.

மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவர்.

எங்கள் அதிபர் திரு. தியாகராசா அவர்கள் தனது அன்பாலும், பண்பாலும், ஊக்கத்தினலும், கடமை யுணர்ச்சியினலும் காரைநகர் மக்கள் உள்ளத்தையும் கருத்தையும் கொள்ளை கொண்டவர். அவர் இந்துக்கல்லூரிக்கு மாத்திரமல்லாது கிராம வளர்ச்சிக்கும் அளப்பரிய சேவைகள் செய்துள்ளார். அரசாங்கம் பாடசாலைகளைச் சுவீகரிக்க முன்பு காரைநகர் கிராமசபையின் தலைவராக இருந்தபோது கிராமமுன்னேற்றத்திற்கு அயராது உழைத்தவர். கிராமப்புறத்தின் தண்ணீர் இல்லாக் கஷ்டத்தைப் போக்கவும், நவீன முறையில் ஆஸ்பத்திரி ஒன்றை அமைக்கவும் அன்றி மற்றும் பல திட்டங்களிலும் செயற்பட்டு வருகிறார்.

சிறந்த கல்விமான்.

திரு. தியாகராசா அவர்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டின் சிறந்த கல்விமான் என்று எல்லோராலும் புகழப்பெற்றவர். அவர் எழுதிய இலங்கையின் பொருளாதாரம் என்னும் நூல் பலவேறு பல்கலைக்கழக உபவேந்தர்களாலும் பாராட்டப்பட்டது. இன்று அந்தப்புத்தகத்தைத் தமிழாக்கம் செய்து உயர்தர வகுப்புமாணவர்களுக்குப் பயன்படும் புத்தகமாக்கும் பொருட்டு ஆக்க வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

காந்தீயவாதி:

எங்கள் அதிபர் ஒரு சிறந்த குணக்குன்று. பொறுமையும், அடக்கமும், சாந்தமும் ஒருங்கே அமைந்தவர். அவர் இந்தியாவில் படிக்கும் காலத்தில் காந்தீய வழிகளில் ஈடுபாடு கொண்டவர். இதைத் தமது மாணவர்களுக்கும் போதித்துள்ளார். இன்று இவருடைய கருத்துக்கள் அவருடைய பழையமாணவர்களிடம் பிரதிபலிப்பதைக் காணலாம். மேலும் எங்கள் கல்லூரி அதிபர் சிறந்த சங்கீத ரசிகர். கர்நாடக சங்கீதத்திலும் கதாப்பிரசங்கங்கள் செய்வதிலும் சிறந்த விற்பன்னர். அதையும் தமது மாணவர்களுக்கு ஒரு கலையாகக் கற்றுக்கொடுத்துள்ளார்.

இன்று எங்கள் அதிபர் தமது 54 ஆவது வயதில் 28 ஆண்டுகளாகக் கல்லூரி முதல்வர் பதவியை வகித்து விட்டு ஓய்வு பெறுகிறார். காரணம், தான் கல்வித்துறையில் ஆற்றிய சேவையை விட்டு அரசியலில் ஈடுபட்டு பிறந்த பொன்னாட்டுக்கும் தமிழ் மொழிக்கும் மேலாம் இலங்கை மாதாவுக்கும் சேவைசெய்யும் விருப்பத்தாலேயாகும். அவருடைய உயர்ந்த லட்சியத்திற்கும் ஆக்கசேவைகளுக்கும் வாழ்த்துக் கூறுவோம். வாழ்க அவர் சேவை! (ஈழநாடு 7-4-70)

# உழைப்பால் உயர்ந்த உத்தமர்

## — திருமதி பேபி அத்தனுசியார் —

(சில்லாலை மாதர் முன்னேற்றச் சங்கத் தலைவி)

எங்கள் தேசியப் பேரவை உறுப்பினர் உயர்திரு. ஆ. தியாகராசா அவர்கள் உழைப்பால் உயர்ந்த உத்தமராவார். தனக்கென வாழாது பிறர்க்குரியாளனாய்த் தன்னலமற்ற தொண்டுகள் செய்யும் எம் பெரியார்.

"உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்"

என்ற வள்ளுவர் வாக்கிற்கோர் இலக்கியமாக விளங்குகின்றார்.

தலைசிறந்த கல்விமானாகத் தன் புகழ் வாழ்வைத் தொடங்கியவர், இன்று தனிப்பெரும் அரசியல் ஞானியாகத் திகழ்கின்றார். ஒன்றுபட்ட இலங்கை, தேசிய ஒருமைப்பாடு, பொருளாதார மேம்பாடு என்பன இவர்களின் சீரிய இலட்சியங்களாகும்.

கடந்த ஆறு ஆண்டுகளில் எம் தொகுதி இவர்களால் பெரும் நன்மைகள் பெற்றுள்ளது. இவர்கள் தலைமையில் இயங்கும் பண்டத்தரிப்புப் பல நோக்குக் கூட்டுறவுச் சமாசம் வெற்றிச் சின்னங்களில் ஒன்றாகும். பல கிராமங்கள் பெறும் மின் ஒளி, புதிய வீதிகள், புதிய வசுப்பாதைகள், புதிய பாடசாலைக் கட்டடங்கள், தபாற் கந்தோர்களுக்குத் தொலைபேசிகள் என்பவையெல்லாம் இவரது தூய தொண்டின் சிகரங்கள்.

பகைவனுக்கும் அருளும் நன்னெஞ்சும், பாகுபாடற்ற சேவை, எடுத்ததைத் தொடுத்து முடிக்கும் ஆற்றல் எல்லாம் இவர்களிடம் காணப்பெறும் இனிய பண்புகளிற் சிலவாகும்.

இப்பண்புகள் நிலைபெற, ஒளிவிட உதவுபவர் எம் தலைவரின் அன்புத் துணைவியாரவர்கள். பூவைச் சிறக்க வைப்பது அதன் மணமன்றோ!

மலராக விளங்கும் திரு. தியாகராசா அவர்களையும் மலரின் மணமாக விளங்கும் திருமதி. தியாகராசா அவர்களையும் பல்லாண்டு வாழ்க, வாழ்க என வாழ்த்துகிறோம்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."



பாங்குடன் பயின்று பட்டம் பெற்று
ஓங்கிய பணிக்கு உறுதி கொள்கிறார்.

"ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே"



கல்லூரி வாழ்வில் 'ஹாக்கி' வீரர்தலைவனாக

# இலட்சியப் பெண்

— நாவேந்தன் —

தேசிய அரசுப் பேரவை உறுப்பினர், சிறந்த கல்விமான், ஓய்வு பெற்ற கல்லூரி அதிபர், எந்நேரமும் ஏதாவது ஒரு பொதுநலத் தொண்டுக்கென்றே தம்மை அர்ப்பணித்துக்கொண்ட ஒருவர். இத்தகையவரின் இல்வாழ்க்கைத் துணைவியாக இருந்து, அவரது அயராத பணிகளுக்கெல்லாம் ஆக்கமும், ஊக்கமும், ஆலோசனையும் நல்கக் கூடிய தகைமையுள்ள ஒரு பெண் எத்தகையவராக இருக்கமுடியும்...? பட்டதாரியாக, நாலுந்தெரிந்தவராக, நவநாகரிகத்தில் ஊறிய ஒருவராக இருக்க வேண்டுமல்லவா? இல்லையேல் இன்றைய சமுதாய அமைப்பில் முன்னணிப் பொறுப்புள்ள ஒருவரின் துணைவியார் என்கின்ற பெருமை நீடிக்கமுடியுமா...?

அரசியல் ஈடுபாடும், சமுதாய நோக்கும் கொண்ட இளைய தலைமுறையும், ஏன், தொகுதி மக்களுமே இத்தகைய குணாம்சங்களைப் பெரிதும் எதிர்பார்க்கவே செய்வார்கள்!

ஆனால் —

வட்டுக்கோட்டைத் தொகுதித் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. ஆ. தியாகராசா (எம். ஏ., எல். லிற்.) அவர்களின் அருமைத் துணைவியார் இந்த எதிர்பார்ப்புக்களுக்கு முற்றிலும் எதிரானவர். அவரைப் பார்த்ததுமே யாழ்ப்பாணத்துக் கிராமியத் தமிழ்ப்பெண்மையின் புனிதமான, வணங்கத்தக்க வடிவத்தைத் தரிசிக்கிறோம். அவரிடத்தே ஆடம்பரமில்லை, அகம்பாரமில்லை, நவநாகரிக மோகம் துளியும் கிடையாது, அவர் பேச்சில் எளிமை, இனிமை, தெளிவு, அடக்கம் அத்தனையும் தென்படும், திருமதி தியாகராசா அவர்கள் பட்டதாரியல்லர், அதிகம் படித்தவரல்லர். அதிகம் படித்தவராக, அதிகம் தெரிந்தவராகக் 'காட்டிக் கொள்ளும்' விருப்புக்கூட இல்லாதவர். ஆனால், அரசியல், இலக்கியம், சமயம், சமுதாய நோக்குப் பற்றி அவர் கூறுங் கருத்துக்கள் எண்ணியெண்ணி என்றும் பயன்பெறக் கூடியவை என்பதனை எல்லாருமே அறியமுடியாது. காரணம் அவரது அடக்கம்.

பெண்ணுக்குப் பெருமை அவள் தன் கணவனின் கருத்தறிந்து நடத்தல், திருமதி தியாகராசா தமது கணவர் கீறிய கோட்டைத் தாண்டாதவர். "ஒருவனது வெற்றிக்கும் தோல்விக்கும் அவனது மனைவியின் பங்கு மகத்தானது" என்று திரு. தியாகராசா அவர்கள் இடையிடையே கூறுவார்கள். அவரது வெற்றியின் இரகசியமே திருமதி தியாகராசா என்ற பெண்மையின் புனிதம் என்பதில் ஐயமேயில்லை.

"மனைத்தக்க மாண்புடையள் ஆகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை" என்று பொய்யில் புலவரான வள்ளுவப் பெருந்தகை வாழ்க்கைத்துணைநலம் பகர்கின்றார். திருமதி தியாகராசா வள்ளுவர் கண்ட பெண்மையின் மூலவடிவம். அவரது செயல்கள்,

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்" எனும் வள்ளுவர் வாக்கின் வெளிப்பாடுகள். திரு. தியாகராசா அவர்கள் அஞ்சா நெஞ்சர். அடலேறு, நிமிர்ந்து நடப்பவர், நாணியும், கோணியும் தன்னலம் பேணத் தெரியாத ஆண்மையாளர். அவர் வெற்றியின் வேந்தர். இவற்றுக்கெல்லாம் அடிப்படையாக அமைந்து விளங்குபவர் தமிழ்ப் பெண்மையிற் சிறிதுங்குன்றாது பொலிந்து விளங்கும் அவரது துணைவியார்தாம். திரு. தியாகராசா அவர்கள் பாக்கியசாலி. பெரிய பதவிகள், நிறைந்த கல்வி, நேர்மை, நீதி நிறைந்தவர் என்பதால் மட்டுமன்று, இலட்சியத்தின் பெண்மை அரசாக விளங்கும் இல்லக்கிழத்தியை அடைந்தாலுமே அவர் ஆண்மை

சிறக்கின்றது. அவரது இல்வாழ்வு மகத்தானது. நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம் என்கின்றான் பாவேந்தன் பாரதிதாசன். தியாகரது இல்வாழ்க்கையும் ஒரு தியாக வாழ்க்கையாகச் சிறப்பதும், பல்கலைக்கழகமாகப் பரிமளிப்பதும் திருமதி தியாகராசா அவர்களினாலே என்று குறிப்பிடுவதில் வியப்பிருக்க முடியாது!

ஐயா அவர்களை அறிந்த இருபத்தைந்து ஆண்டுகளில் ஏறக்குறைய ஏழு ஆண்டுகள் அவருடன் மிகநெருக்கமாகப் பழகியுள்ளேன்; ஐயாவும், அம்மாவும் எனது தந்தையும் தாயும் போல! அரசியலில் நாங்கள் அறிமுகமானாலும் எங்கள் அன்பு அதற்கு அப்பாற்பட்ட கீர்த்திபெற்றது. ஐயா அவர்கள் இந்த நாட்டின் மகோன்னதமான, மனிதாபிமானம் படைத்த அரசியல்வாதி, சாதாரண உணர்ச்சி அரசியல் அவர் அறியாதது. அந்த அறிவுக்கடலின் நன்முத்தாக விளங்கும் அன்னையார் - திருமதி தியாகராசா அவர்கள் - தந்துணைவருடன் நீடூழிவாழ நெஞ்சார வாழ்த்துவோமாக!

# தமிழினத்தின் வருங்கால மேம்பாட்டிற்கு வித்திட்ட பெரியார்

— திரு. எஸ். வயிரமுத்து அவர்கள் —

(தலைவர், சங்கானைப் பட்டினசபை)

இந்துமாக்கடல்சூழ் ஈழத்திருநாட்டிலே, வட்டுக்கோட்டைத் தொகுதி வாழ் தமிழ் பேசும் நன்மக்கள், தமது தனிப்பெருந் தலைவர் திரு. ஆ. தியாகராசா அவர்களுக்கு மணிவிழா எடுக்கிறார்கள் என்னும் மகத்தான செய்தியைக் கேள்விப்பட்டேன்; அறுபது வயதைக் கண்டு விட்டபோதிலும், ஆறு ஆண்டுகள் தேசிய அரசுப்பேரவையில் அறுபதாண்டுகளிலும் செய்ய வியலாத அரிய சேவை செய்த அவருக்கு சட்டியப்த பூர்த்தி விழா எடுப்பது அவரின் மகத்தான பணிகளை நினைவு கூருவதற்குப் போலும்;

நிலைபெயரா உள்ள உறுதியும், உயர்ந்த நோக்குகளும், கரவைக் கனவிலும் அறியா அன்புள்ளமும் கொண்டு மக்கள் தொண்டே மகேசுரன் தொண்டெனக் கருதி அயராதுழைத்து வரும் திரு. ஆ. தியாகராசா அவர்கள் கடந்த இருபதாண்டுகால மாக எனக்குத் தெரிந்த அரசியல் நண்பராவர். இவர் எம். ஏ., எம்.லிற். பட்டதாரி மட்டுமன்றி, இலக்கிய பொருளாதாரத் துறைகளில் சிறந்த மேதையாகக் கணிக்கப் படுபவர். தான் நீண்டகாலமாய்ச் சிறப்புடன் ஆற்றி வந்த விசேட அதிபர் பதவியை உதறித்தள்ளி, கடந்த பொதுத்தேர்தலில் வட்டுக்கோட்டைத்தொகுதி உறுப்பின ராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டு, அத்தொகுதிமக்களுக்காகவே அரும் பணிபுரிந்து வருகின்றார்.

இவர் மிகப்பழையதாகிப் போன அரசியல் விபர்சனங்களைப் பேசிப் பயனில்லை என்று கண்டு அரசாங்கத்தை அணுகி மக்களின் நல்வாழ்வுக்கான பலவேறு கருமங் களைச் சோர்வின்றிச் செய்து வருகின்றார்.

சுருங்கச் சொல்லு மிடத்து பாகுபாடு இன்றி, அரசியல் பேதமின்றி சாதி சமய வேறுபாடின்றிக் கடமைபுரியும் இவர் தமிழ் இனத்தின் வருங்கால மேம்பாட்டிற்கு வித்திட்ட பெரியார் என்பதில் துளியும் சந்தேகமில்லை.

சங்கானையைப் பொறுத்தவரையில் மின் விஸ்தரிப்பு, பாடசாலைத் தரஉயர்வு, அஞ்சலகத் தரஉயர்வு, மருத்துவமனை விரிவாக்கம், கலாசாரமண்டப அமைப்பு, நீதி மன்ற விஸ்தரிப்பு, நலவியற்பாதுகாப்பு போன்ற சேவைகள் ஒருசிலவாகும். இவரும் இவரது குடும்பத்தாரும் பல்லாண்டு வாழ்ந்து நாட்டுக்கு நலம் புரியவேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

# சேவை தொடர, பல்லாண்டு வாழ்க.

— வட்டுக்கோட்டை, கி. வைரமுத்து J. P. —

"யாதுமூரே யாவருங் கேளிர்" எனத் தமதினிய செம்மொழியில் செம்பொருள் வழங்கிய பண்டைத்தமிழன் கூறிய நல்வழி நின்று, தீதெலாம் உமிழும் பிரிவினை தவிர்த்து நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும் நித்திய சுபீட்சமளிக்கும் சகோதரத்துவ உறவுக்கும், தான் வாழ்ந்துகாட்டி மற்றோரையும் அவ்வழி வாழ அயராது உழைக்கும் ஓர் அருந்தமிழ்ச் செம்மலை நாம் பிரதிநிதியாகப் பெற்றமை பொதுவாக நமது நாட்டுக்கும் சிறப்பாக வட்டுக்கோட்டைத் தொகுதிக்கும் பெருமை அளிப்பதொன்றாகும்.

ஏகாதிபத்தியத்தின் திருவடித்தூசை தொழுது தலையிற் சூடி மாருட்டம் பிடித்தாடும் அடிமைப் பித்தரின் அரக்க எதிர்ப்பையும் தகர்த்து எமதருமைத் தாய்நாடு விடுதலைபெற்றுக் குடியரசாவதற்கு எமது தொகுதிப் பிரதிநிதி அரசியல் ரீதியில் ஒத்துழைப்பு நல்கியதன்மூலம், "என்றும் சுதந்திரத்தை அவாவி நிற்கும் வீரத்தமிழினம் தேசிய விடுதலையை எதிர்த்தது" என்ற வசைப்பெயர் ஈழத் திருநாட்டின் வரலாற்றில் இடம்பெறுமற் செய்தமை அரிய சாதனை என்பதை மாற்றலரும் மறுப்பவரல்லர்;

அரசியற் சுதந்திரம் மட்டும் மனித வாழ்வை வளம்படுத்தாது; பொருளாதாரச் சுதந்தரமும் இணையும்பொழுதே நல்வாழ்வு மலரும்; விவசாயி தொழிலாளி வடிக்கும் வியர்வையிலேயே பொருளாதாரம் பெருகலும் மனித சமுதாயம் நிலை நிற்லும் நிகழ்கின்றன என்பதை அறிந்தும் அவர்கள் உழைப்பை, ஊதியத்தை உறிஞ்சித் தத்தம் தனியுடைமையாக்கும் முதலாளித்துவ அக்கிரமத்தால் உலகெங்கணும் மக்கள் வாழ்வில் தாழ்வும் விரக்தியும் பன்முகப் பிரச்சினைகளாக எழுவதையும் இவற்றிற்கெல்லாம் அரசியலில் சோஷலிசப்பாதையே விமோசனம் அளிக்கும் என்னும் பழுத்த அரசியல் ஞானிகளின் புரட்சிகர சித்தாந்தத்தில் நம்பிக்கை கொண்டு அவற்றை ஏற்று நடைமுறையிற் காண முயலும் எமது பிரதிநிதி உண்மையில் "மக்கள் பிரதிநிதி" ஆகின்றார்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோனெனக் கேட்ட தாய்" என்ற வள்ளுவன் பொன்மொழிக்கிணங்க, தமிழ்த்தாயே மகிழும் தமிழ்மகன் உயர்திரு. ஆ. தியாகராசா அவர்கள், எந்தையர் கூறும் தமிழ்மொழி வழிநின்று அரசியலாரிடம் தமிழ் உரிமைபெற்றும், தமிழனின் விழுமிய கலாச்சாரம் போற்றியும், பேசரிய பண்பாடு பேணியும், உயிர்நாடியனைய பொருளாதார வளர்ச்சிக்கு உழைத்தும் மக்களுக்கு ஆற்றும் சேவை தொடர்ந்து நீடிக்கவும் அன்னார் பல்லாண்டு வாழவும் எமது வாழ்த்து இவ்வைர விழாவில் உரித்தாகுக.

# எனது நோக்கிலே தியாகராசர்

— சிகண்டியார் —

" வள்ளல், மணத்தை மகிழ்ந்தனன் என்றால்
கொள்ளென முன்பு கொடுப்பதை அல்லால்
வெள்ளை மனத்தவன் வில்லை எடுத்திப்
பிள்ளைமுன் இட்டது பேதைமை என்பார் "

கம்பர் வாக்கு இது. விசுவாமித்திரரோடு இராம இலக்குமணர்கள் மிதிலைக்கு வந்தார்கள். சனகர், முனிவரோடு இருந்த இராமலக்குமணர்களைப் பார்த்து, " யாரை இவர் ! உரைத்திடுமின் அடிகள் " என வினவினார். " இவர்கள் விருந்தினர்கள் ; நின்வேள்வி காண வந்தவர்கள் ; வில்லுங் காண்பார் ; பெருந்தகைமைத் தயரதன் தன் புதல்வர்கள் " என்று அறிமுகம் செய்து வைத்தார் முனிவர். அவ்வளவுதான், மலையை ஒத்த மாய வில்லை அங்கு கொண்டு வந்து வைத்தார்கள் ; விசுவாமித்திரரின் குறிப்புணர்ந்த இராமன் வில்லை வளைக்க எழுந்தான். அவன் வில்லை வளைப்பதன்முன், ஆங்குக் கூடியிருந்த மங்கையர் அவனது அழியா அழகில்—ஈடுபாடு கொண்டவர்கள் பலவும் பேசலானார்கள் ; பேச்சிலே மிதந்து வந்த வார்த்தைகளைக் கம்பர் செய்யுள் வடிவில் நமக்குக் காட்டுகிறார்.

உதாரகுணம் படைத்த சனகன், சீதையின் திருமணத்தை நிறைவேற்ற விரும்பியிருந்தால், இராமனைக் கண்டவுடனே சீதையை ஏற்றுக்கொள் என்று முதலில் கன்னிகாதானஞ் செய்து கொடுப்பதை விடுத்து, வெள்ளை மனத்தோனாகிய அவன், சிறுபிள்ளையாகிய இராமன்முன் கொடிய வில்லை வைத்தது பேதைமையாகும் என்பது பாட்டின் பொருள், இது எல்லோரும் அறிந்த கதை.

சனகர் பெரிய இல்லற ஞானி ; எல்லோராலும் போற்றப்படுபவர் ; பராக்கிரமத்தில் யாருக்குஞ் சளைக்காதவர் ; மாமன்னர். அந்த மாமன்னருக்குக் கம்பர் தந்த வரிசைகள் இரண்டு. ஒன்று ' வள்ளல் '. மற்றது ' வெள்ளை மனத்தவன் '.

அமைதியான ஆடம்பரமற்ற தோற்றம். இனியவையே இயற்றத் துடிக்கும் இதயம் ; எளிய வாழ்வு. இவற்றின் கொள்கலமாக விளங்கும் திரு. தியாகராசா அவர்களுடன் பழகுபவர்கள் அவர் " நவயுகச் சனகர் " என்பதை நிச்சயமாக ஒப்புக்கொள்ளவே செய்வார்கள். அரசியற் கருத்தில் முரண்பட்டவர்கள் கூட அவரது தனிப்பண்புகளைப் பாராட்டவே செய்கின்றார்கள் ;

இக்காலத்தில் பெரும்பாலான பிரமுகர்கள் தலைநகரிலே இடாப்பீகமாக நவீன வசதிகளுடன் உப்பரிகை அமைத்துக்கொண்டு குபேர வாழ்க்கை நடாத்துவதைப் பார்க்கிறோம். வாய்ப்பு வசதிகளற்ற — குடிநீர் வசதிகூடக் குன்றிய காரைதீவிலே — தமது பிறந்தகத்திலே — அளவோடமைந்த இல்லத்தில் சாதாரண கிராமவாசி ஒருவரைப்போல வாழ்ந்து வருகிறார்கள்.

தந்தையார் குடியேற்றநாட்டு ஆட்சியில் பதவி வகித்த பெரிய புள்ளி ; அவர் மகன் அயல்நாடு சென்று ஆங்கிலத்தைக் கற்ற எம். ஏ. எம். லிட். பட்டதாரி. ஏன்? உயர்தர அதிபராகப் பலவாண்டுகள் கடமையாற்றிய பேராசான், அரசியல், பொருளாதாரம், சமயம், கல்வி முதலிய பல துறைகளிலும் ஈடுபாடு கொண்ட அறிஞர்

அவரது இல்லமோ வெகு எளிமையானது. மகாஞானியாகிய விதுரர் வாழ்ந்த சிறு குடிலுக்கு ஒப்பாகக் கூறினாலும் கூடத் தவறில்லை.

ஒருவரது உள்ளத்தில் தேங்கி நிற்கும் உணர்வுகள் செயலில் வெளிப்படுவதைச் சாதாரணமாகக் காண்கின்றோம். தியாகராசரின் இல்லத்திற்குச் செல்பவர்கள் 'அவரின் வீட்டின் முன்சாலையில் மாட்டப்பட்டிருக்கும் இரு படங்களைக் காணாமல் இருக்கமாட்டார்கள். அவற்றுள் ஒன்று "தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நின்றதாம் ஓர் பாரததேசந்தன்னை வாழ்விக்க வந்த" காந்தியடிகளின் அடக்கமான ஓவியம். மற்றது இன்றைய உலகிலே பெரிய வல்லரசாக விளங்கும் அமெரிக்க நாட்டில் சமூக விடுதலைக்காகத் தம்மைத் தியாகஞ்செய்த ஆபிரகாம்லிங்கனின் ஓவியம். ஆம்! இவை திரு. தியாகராசாவின் அஹிம்சையோடு கூடிய விடுதலை வேட்கையின் வெளிப்பாடுகள்.

மேலைத்தேய நாகரிகத்தையும் கீழைத்தேயப் பண்பாட்டையும் வெகு நுட்பமாக உணர்ந்த தியாகராசா அவர்கள் சைவமாஞ் சமயம் சாரும் ஊழ் பெற்றமைக்காகப் பெரிதும் உவப்பவர்: சமுதாயத்தில் உயர்மட்டத்தில் வாழ்ந்துவரும் ஒருவர், சைவாசாரம், வழிபாடு, நோன்பு, பிதிர் கருமம் இவற்றில் அளாதியான பற்று உடையவராகக் காணப்படுகின்றார்கள் என்றால் என்ன கூற இருக்கின்றது! தூய சைவ உணவும், போதைப் பொருள்களைக் கனவிலும் நினையாத கந்நோன்பும் இவருக்கன்றி, வேறு எவருக்குக் கைவரும்!

திரு. தியாகராசா அவர்களை வள்ளல் என்று குறிப்பிட்டோம்; வள்ளல் என்பதற்கு வரையாது கொடுப்போன் என்பது பொருள். வலியோன் என்னும் மற்றொரு பொருளும் உண்டு. இவர் கலைமாச் செல்வியின் கருணை, திருமாமகளின் சீரிய பார்வை, வெற்றித் திருவின் நோக்கு எல்லாம் பெற்றவர். ஆசிரியராகவும், உயர் அதிபராகவும் இருந்த காலத்தில் ஞானதானஞ் செய்த சிறப்பினை அறியாதார் யார்? இந்நாளில் எமது தலைவர் இல்லத்தில் என்றும் ஏற்பட்ட கூட்டம் நெருக்கி அடித்துக் கொண்டு நிற்கத்தான் செய்கின்றது. குறை வேண்டுநர் பலர், முறை வேண்டுநர் பலர். இளங் காளையர், நங்கையர் குடுகுடு பாட்டியர் தொண்டு கிழவர் எல்லோருந்தான் கூடியிருக்கின்றார்கள். ஏககாலத்தே எல்லோரிடமும் குசலம் விசாரித்து வேண்டுவன செய்கின்றார். அதுமட்டுமன்றி எழுதிக்கொண்டே இருக்கின்றார்; தொலைபன்னியில் உடனுக்குடன் தொடர்பும் கொள்கின்றார். எழுதுகோல் சலித்தாலும் கை சலிப்பதில்லை; இதனை "யக்ஞம்" —அறக்கள வேள்வி- என்றுதானே சொல்ல வேண்டும். ஓடுகின்ற ஆற்றிற்கு ஓய்வேது? மிகச் சிறியவரையும் ஐயா என அழைக்கும் ஈரங்கலந்த பேச்சு; எவரோடும் உயர்வு தாழ்வின்றிப் பழகும் — அளவளாவும் பண்பு — இவை வெறும் அரசியற் சாகசங்கள் அல்ல. அவர் முன்னோர் விட்டுச்சென்ற முதுசொம்.

கம்பர் சனகரை 'வெள்ளை மனத்தவன்' என்றாரே! இது தியாகருக்கு முழுக்க முழுக்கப் பொருந்தும். வெள்ளை மனம் என்றால் தூய மனம் — குழந்தை உள்ளம் கள்ளங்கபடமற்ற சூதுவாது தெரியாத பிஞ்சுமனம். யூதேயா நாட்டுச் சித்தர் குழந்தைகளை என்னருகில் அனுப்புங்கள் என்றாரே! பச்சை உள்ளத்தின் பண்பினை அனுபவிப்பதற்காகவே அவ்வாறு திருவாய் புகன்றார். இந்த இல்லற ஞானி பிறர் ஆக்கத்திற்காகவும் நல்வாழ்வுக்காகவும் எப்பொழுதும் ஏதாவது சிந்தித்துக்கொண்டே இருக்கின்றார்; பகைவனுக்கும் கேடு எண்ணாத தலைவர். தம்மால் யார்க்கும் எதுவும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டபோது வருத்தம் தோய்ந்த குரலில் "கெஞ்சும்" பாவனையில் பேசுவதை நெருங்கிப் பழகுபவர்கள் காணத்தான் செய்வார்கள்.

குத்து, வெட்டு, கீழறுப்புப் போன்ற பலவித சாகசங்கள் மலிந்த அரசியல் மேடையில் வெள்ளை மனத்தவர் பாராளுமன்ற உறுப்பினர் பாத்திரம் ஏற்று நடிப்பதென்றால் சில தனித்தன்மைகள் இருக்க வேண்டுமே! நாளெல்லாம் பொதுமக்களுடன் பேசிப் பேசிக் களைப்படைந்த நிலையில் நிற்கும் இவர் அகம்பாவத்துடன் அணுகும் சிலரின் ஆற்றாமைக்கு ஆளாக வேண்டி வந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

நமது புதுயுகச் சனகருக்குத் தெய்வ சகாயம் நிரம்ப உண்டு. பெரிய பெரிய ஆபத்துக்களிலெல்லாம் சர்வ சாதாரணமாகத் தப்பித்துக் கொண்டவர். "அச்சமில்லை அச்சமில்லை உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை" என்று வாழும் இவர் மாற்றாரிடம் கூடச் சந்தேகம் கொள்ளாதவர். அவ்வளவுக்கு இளகிய இதயம் படைத்தவர்.

நமது தேசீய அரசுப் பேரவை உறுப்பினரின் வாழ்க்கை மேம்பாட்டின் அடித்தளம் திருமதி: தியாகராசா அம்மையார்; இவர் நாகரிகத்தின் உச்சிப்படியில் நின்று நடிக்கும் நங்கையரின் சுபாவத்திற்கு முற்றிலும் மாறுபட்டவர். வள்ளுவர் மகளிர்க்கு உரைத்த மாண்புகள் அனைத்தும் வாய்ந்த இவர் தமது நாயகருக்கு மதிவல்ல மந்திரியாகவும் அலந்தார்க்கும் அல்லார்க்கும் ஆறுதல் அளிக்கும் அன்னையாகவும் காட்சி அளிக்கின்றார். வறியோர்ப் பேணி, விருந்தோம்பித், துறவியர்க்கு உதவி வாழும் இவர் பட்டங்கள் பெற்றுச் சட்டங்கள் ஆளும் பாவையர்களைவிட அறிவிலும் ஆற்றலிலும் மேம்பட்டு விளங்குகின்றார். பண்டைக் குருகுலங்களில் முனிபுங்கவர்களின் பாங்கர் அமர்ந்து அறத்தாறு புரியும் தவத்தாயரை ஒப்பத் தண்ணளி படைத்து விளங்குகின்றார்.

நமது நாட்டிலே சீரிய அறப்பண்புகளைத் தூவிய பெருமக்கள் வரிசையில் சைனம், பௌத்தம் முதலிய மதங்களைச் சார்ந்த சான்றோர்களையும் சேர்த்தே ஆக வேண்டும். குண்டலகேசி அழிந்துபோன பழைய ஒரு காப்பியம். அதன் முதற் செய்யுளிலே இறைவனின் — தலைவனின் — உயர் பண்புகள் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளன.

முன்தான் பெருமைக்கண் நின்றான்; முடிவெய்து காறும்
நன்றே நினைந்நான் குணம் மொழிந்தான்; தனக்கென்று
ஒன்றானும் உள்ளான்; பிறர்க்கே உறுதிக்கு உழந்தான்
அன்றே இறைவன் அவன்தாள் சரண் நாங்கள் அன்றே,

என்பது அது.

இதில் கூறப்பட்ட இலக்கணங்கள், இக்காலத்தில் தலைவர்கள் என்று கூறும் அரசியல்வாதிகளுக்கு மிகமிகப் பொருத்தமானவை; எந்தத் தலைவரும் சுயவாழ்வில் பிறர் மதிக்கும் பெருமையினராக ஒழுக்கத்திற்கு வரம்பானவர்களாக மிளிர்தல் வேண்டும். இறுதி மூச்சு உள்ளவரை நன்றே நினைத்து நன்றே சொல்லி நன்றே செய்துவருதல் வேண்டும்; தனக்கென்று ஒரு கோட்பாட்டினை இலட்சியத்தை — வகுத்துக்கொள்ளுதல் வேண்டும். எத்தகு நிலையிலும் பிறர் நன்மையைக் கருத்திற்கொண்டு உடல், பொருள், ஆவி மூன்றாலும் அயராது உழைத்தல் வேண்டும். மணிவிழாக் காணும் நமது தலைவர்பால் இந்தப் பண்புகளனைத்தும் பொருந்திப் பொலிந்துகிடந்து அழகு செய்கின்றன.

வாழ்க தியாகராசா! வளர்க அவர் பணி;

# தோழனுமாகித் தொண்டனும் ஆயவன்.

— திரு. ச. விசுவநாதர் அவர்கள் —
(இளைப்பாறிய ஆசிரியர், அராலி)

"ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபதாம் ஆண்டு
தேசியப் பேரவை சிறப்புடன் எய்தினாய்!
மாசிலா மனத்து மாண்புறும் அண்ணால்!
வெண்ணிற உடையும் வெள்ளை யுள்ளமும்
கள்ளங் கபடங் கனவினும் அறியா
வள்ளல் உன்னை வாழ்த்த விரும்பினேன்
கைலஞ் சத்தைக் கனவினும் அறியாய்
மதுவினை நஞ்சென மற்றுநீ புகலுவை
வாழும் வாழ்வில் உன்னை மறந்து
உலகை ஓம்பும் உத்தம புருஷ!
நல்லவர் அறிஞர் நட்பையே நாடி
நில்லா உலகில் நிலைத்த சுகத்தைநீ
எய்தத் துடிப்பதை ஏவரும் மறிவார்
ஏழைக்கு ஏழையாகியும் யாவருக்கும்
தோழனாகியும் தொண்டனு மாகினாய்!
பின்தங்கிய பல கிராமங்களைநீ
முன்மாதிரிக் கிராம மாக்க முயன்றனை
சொல்லுதல் யார்க்கும் எளிது அரிதாம்
சொல்லிய வண்ணம் செயல் என்ற
வள்ளுவன் வாக்கிற் கிணங்க நீர்
பன்னியவற்றை பழுதறச் செய்தீர்
வைத்தியசாலைகள் வளமுறச் செய்தீர்
கல்விச் சாலைகள் கவினுற அமைத்தீர்
தொழிற்சாலைகள் பல துலக்க முறவே
தலத்தகு விருப்புடன் நாட்டினை யன்றோ!
மாதிரிக் கிராமங்கட்கு மின் ஒளி
நல்கி மிளிர்ந்திடச் செய்தாய்
குடிதண்ணீர் குறித்துமே யீந்து
தண்ணளி சுரக்கும் தயாள னாகினாய்!
இன்னும்
ஒன்று பட்டால் உண்டு வாழ்வெனும்
பாரதி வாக்கிற்குப் பாத்திரனாகி
அரசாங்கத்துடன் அமைந்தினி திருந்து
வேண்டிய வெல்லாம் விருப்புடன் பெற்று
வட்டுக்கோட்டையாம் வளமிகு தொகுதிக்கு
இட்டமாகநீ ஈந்தனையன்றோ!
பலநோக்குச் சங்கங்களை பண்புற நடத்தி
சிறப்புறச் செய்தனை, சீர்சால் செம்மால்
விவசாயத்தினை விஸ்தரித்தாய், பயிர்செய்கைக் குழுக்களை
பண்பாய் நிறுவி விவசாயப் பெருக்க வியன்குழுவதனை
அரசியலாரின் ஆணைக்கிணங்கத்
தலைமை தாங்கித் தண்ணளி சுரந்தாய்!

நீதான்,
''பாதகஞ் செய்பவரைக் கண்டால்
பயங்கொள்ளல் ஆகாது பாப்பா'' என்ற
பாரதிவாக்கினை உயர் பண்பெனக் கொண்டாய்
அச்சமென்பதை அகத்திடை கொள்ளாய்
மாணவனாய்நீ மகிழ்ந்த நாள்களில்
விளையாட்டு வீரனாய் விளங்கினை யன்றோ!
ஆசிரியராய் அமைந்த நாள்களில்
அதிபராய் விளங்கி அரியதொண்டாற்றினாய்
அரசியல் வாதியாய் அமைந்த ஆறாண்டதில்
அறுபது வயதினை யடைந்தனை யன்றோ!
அறுபதாம் வயதிலும் ஆறாண்டரசிலும்
அராலிக்கு ஆற்றியசேவை அளக்க முடியுமோ!
உம்மிடம் காணும் உயர்பண் பிற்கெல்லாம்
உம்மில்லமே இருப்பிடமாயது இல்லாள்
அகத்திருக்க இல்லாத தொன்றில்லை என்ற
ஆன்றோர் வாக்கிற்கு அமைவிடவாமது
திண்ணைபுரத்துச் சிவனருளாலே சரித்திரமறியாச்
சாதனை வீர! அரசியல் வாழ்வில்
அதியுயர்ந் தோங்கி வேண்டிய வேண்டிய
விருப்புடன்பெற்று வாழ்க என்று வாழ்த்துகின்றேன்
அராலிப் பதிவாழ் மக்கள் சார்பினில்
வாழ்த்துகின்றேனே வாழி நீடுழி.

# ''கண்ணன் என் சேவகன்''


## இராச வைத்தியர்,
## — திரு. அ. க. குமாரசாமி ஜே. பி. அவர்கள் —

தாங்கள் அறுபது ஆண்டைப் பூர்த்தி செய்து மணிவிழா காணும் இந்த நல்ல நேரத்தில் தங்களுடன் உணர்ச்சி யொன்றி யின்பங் காண்பதில் நாம பெருமகிழ்வு அடைகின்றோம்.

தங்களிடத்தில் பல நற்குணங்கள் ஊற்றெடுத்து விரிந்து. பரந்து செல்வதை நாம் காணுகின்றோம். இந்த இடத்திலே பாரதியின் 'கண்ணன் என் சேவகன்' என்ற தலைப்பே எமக்கு நினைவிற்கு வருகின்றது. தாங்கள் தந்தையாய்த் தாயாய்த் தொண்டனாய், ஆசானாய். மதிவல்லோனாய்த் தொண்டாற்றி வருகிறீர்கள். தங்கள் குறிக்கோள் பெரிதென்பதையும் பயணம் நீண்டதென் பதையும் நாம் அறிவோம். எனினும் தங்களைப் போன்ற செயல் வீரருக்கு இது ஒரு பொருட்டன்று.


தங்களை இந்த இடத்தில் எண்ணும்போது ''வந்தேன், பார்த் தேன், வென்றேன்'' என்ற நெப்போலியனையும், அகிம்சையின் சிகரம் அசோகனையும் தங்களிடத்தில் காண்பதில் இறும்பூதெய்து கின்றோம், ஒருமைப்பாட்டுடன் சமதர்ம நெறியில் பீடு நடை போடும் தாங்கள் இளமையுள்ளத்துடன் வல்லன செய்ய எல்லாம் வல்ல எம் விசாலாட்சி சமேத விசுவநாதப் பெருமானை வழுத்தி வாழ்த்துகின்றேன்;

"இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"



விருந்தோம்பி மகிழும் வித்தகர்.

"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்"



அரசியல் அதிகாரி திரு. அருளம்பலம் அவர்களும் உதவி அமைச்சர்கள் கௌரவ V. T. G. கருணாரத்தின அவர்களும் கௌரவ G. W. சமரசிங்க அவர்களும் தலைவி மகிழ்ந்து நின்றிடும் கோலம்

# கள்ளமற்ற உள்ளம்

—நவயுக நாவலன்—

வாழ்க வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்கவே

வட்டுக் கோட்டைத் தொகுதிக்கு
வாய்த்த நல்ல தலைவரே
வளம் பெருக்கும் திட்டங்கள்
வகுத்தளிக்கும் தலைவரே — வாழ்க

நாட்டுக் கேற்ற தேவை
நன்கு நிறை வேற்றவே
நாட்டங் கொண்ட தலைவரே
நன்மை யெங்கும் பெருகவே — வாழ்க

எதிர்ப்புப் பல சூழினும்
எடுத்துக் கொண்ட கொள்கையை
இறுதி வரை உறுதியாய்
இயக்கி நிற்கும் தலைவரே — வாழ்க

தீமை கண்டு அஞ்சிடாத்
தியாகராசத் தலைவரே
தீவிரமாய் உழைக்கவே
துடி துடிக்கும் தலைவரே வாழ்க

பெருமை சற்று மின்றியே
பேசிப் பழகும் தலைவரே
அருமையான செயல்களை
ஆற்றத் துடிக்கும் தலைவரே — வாழ்க

வட்டுக் கோட்டைத் தொகுதியில்
வாழுகின்ற மக்களைத்
திட்டமிட்டுச் செயற்படத்
தூண்டும் நல்ல தலைவரே — வாழ்க

தூய்மையான நெஞ்சமும்
துணிவு கொண்ட எண்ணமும்
துரிதமான செய்கையும்
துலங்குகின்ற தலைவரே — வாழ்க

தோடி ராகந் தன்னிலே
தோய்ந்து நிற்குந் தலைவரே
வாடி நிற்கும் மக்களை
ஓடித் தேற்றும் தலைவரே — வாழ்க

சாந்தி யெங்கும் பெருகவும்
சமாதானம் நிலவவும்
மாந்தர் வாழ்வு உயரவும்
மனந் துடிக்கும் தலைவரே — வாழ்க

கள்ள மற்ற உள்ளமும்
கட்டிலாத ஆர்வமும்
வள்ளல் போன்ற ஈகையும்
வாய்த்த நல்ல தலைவரே — வாழ்க

கோபங் கொண்டு பேசினும்
கொதித் தெழுந்து ஆடினும்
கொஞ்சங் கூடச் சுயநலம்
நெஞ்சில் இல்லாத் தலைவரே -- வாழ்க

வேகமாக எதனையும்
விரைவிற் செய்ய வேண்டியே
கோபமாக நடித்துமே
கொதிப்புக் கொள்ளும் தலைவரே—வாழ்க

கொஞ்சுங் குழந்தை போலவே
நெஞ்சில் வஞ்சமின்றியே
நஞ்சு மிக்க பாம்மையும்
நலனைக்கும் தலைவரே—வாழ்க

பஞ்சம் மிக்க உலகிலே
வஞ்சம் என்ற பிசாசினை
கொஞ்சங் கூட நெஞ்சிலே
கொண்டிடாத தலைவரே—வாழ்க

# கருமமே கண்ணானவர்

—திரு. க. சுப்பையா அவர்கள்—
(இளைப்பாறிய அதிபர், காரைநகர்)

உயர்திரு: ஆ. தியாகராசா அவர்கள் இலங்கைத் தேசிய அரசுப்பேரவைக்கு வட்டுக்கோட்டைத் தொகுதி உறுப்பினராய் 1970 ம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டபின், இத்தொகுதி மக்கள் கல்வி, கலாசார, பொருளாதார வளர்ச்சியில் புத்தூக்கம் பெற்றிருத்தல் போற்றற்குரியது.

எமது பேரவை உறுப்பினர் அவர்கள் தமது இளம் பராயம் தொடக்கம் எமது தொகுதியின் வளர்ச்சிக்குரிய பல திட்டங்களை ஆர்வத்துடன் வகுத்து வந்தார். அத்திட்டங்களைச் செயற்படுத்தும் அதிகார வசதி, சென்ற தேர்தலின் பின் வலிந்து வந்ததும், ஆக்கப் பணிகளில் ஈடுபட்டார்.

எமது தொகுதிக்குரிய மின்சாரத் திட்டம், குழாய்நீர்த் திட்டம், அரசினர் வைத்தியசாலைகளின் விஸ்தரிப்புத்திட்டம், போக்குவரத்துக்குரிய வீதிகள் அமைத்தல், புதிய வசுப்பாதைகள் திறத்தல், பாடசாலைகளின் விஸ்தரிப்புக்குரிய புதிய கட்டடங்கள் அமைத்தல் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், கிளைச்சங்கங்கள் நிறுவுதல் புனரமைப்புச் செய்தல், விவசாய விருத்திக்குரிய கமத்தொழிற் சேவை நிலையங்கள் அமைத்தல் என்பன இவரது விடாமுயற்சியால் அவரது சேவைக்காலத்தில் பூரணமாய் நிறைவேற்றப்பட்டமை இத்தொகுதி மக்களால் பாராட்டப்படுவதோடு, இஃது இத்தொகுதிச் சரித்திரத்தில் சிறப்பான இடத்தைப் பெறுகின்றது.

பொதுத் தேர்தலின் போது மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற அல்லும் பகலும் உழைத்து, எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளாது கருமமே கண்ணாயிருந்து மக்கள் பணி செய்து வருகின்ற எங்கள் தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் திரு. ஆ. தியாகராசா அவர்களின் 60 வது பிறந்த தினத்தைக் கொண்டாடுதல், நன்றிக் கடன் மறவாத வாக்காளராகிய எமது கடன். அவர்கள் நீடூழிவாழ்ந்து, தொடர்ந்து இப்புனிதப்பணியைச் செய்ய எல்லாம் வல்ல இறைவன் நல்லருள் புரிவாராக.

# சொல்லியவண்ணஞ் செய்யுஞ் சுகுணன்

— திரு. வ. செல்லத்துரை அவர்கள் —
(தலைவர்)

— திரு. சி. சின்னத்துரை அவர்கள் —
(செயலாளர்)

(கிராமாபிவிருத்திச் சங்கம் — பிராம்பத்தை)

ஈழத்தந்த பெருந்தகையோய், நுமக்கு மணிவிழா நிகழ்வுறுவது கேட்டு அகமிக மகிழ்ந்தனம். அது தங்கள் சேவைக்குச் சாலப் பொருத்தமேயாகும். நீவிர் எமது தொகுதியின் தேசியப் பேரவை உறுப்பினராக அமர்ந்து, சென்ற ஆறு ஆண்டுகளாக இதற்கு முன் யாம் பெற்றிராத அளவில், அளவற்ற நன்மைகளை இயற்றித் தந்தீர்கள்.

இதுவரை இருள் மண்டிக்கிடந்த கிராமங்கள் மின் ஒளி பெற்று மிளிருகின்றன. போக்குவரத்து வசதியற்றுக் கிடந்த மூலைமுடுக்குகள் எல்லாம் நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டு விஸ்தரிக்கப்பட்டன. விவசாய விரிவாக்கத் திட்டங்கள் மூலம் விவசாயிகளான நாம் நல்வாழ்வு பெற்றோம். கல்விக் கூடங்கள் புனரமைப்புப் பெற, அரசின் அனுசரணையுடன் நிதிக்குவைகளை வாரி வாரி இறைத்தீர்கள். அதனால் நம் ஏழைச்சிறார் புதியகல்வித்திட்டத்தினால் மிக்கபயன் அடைகின்றனர். வருங்காலச் சந்ததியினர் பல்கலைபயில வளாகம் அமைப்பித்த பெருமை தங்களைச் சார்ந்ததே. "கூட்டுறவு நாட்டுயர்வு" என்று அறைகூவித் தலைமை தாங்கி நாம் பெறக்கூடிய நன்மைகளையும் சலாக்கியங்களையும் அடையவைத்த நன்மை நுமதேயாகும். வேலையற்ற வாலிபர் பலர் வேலைவாய்ப்பும் பெற்றனர்

அண்ணலே, சாதிமத பேதமின்றி "என்கடன் பணி செய்து கிடப்பதே என்னும் மணிமொழிக்கு உதாரண புருடராகித் தியாக வாழ்வினை மேற்கொண்டு தியாகராசா என்னும்நும் பெயரின் பொருளாக விளங்குகின்றீர்கள், பின்தங்கிய எமது பிராம்பத்தைக் கிராமத்திலும் கருணை செலுத்தியுள்ளீர்கள். முருகப்பெருமான் சந்நிதிக்கு நேராக ஒரு சிறப்பான வீதியை அமைப்பித்தீர்கள். இலவச பாலர் கல்விச் சாலை ஒன்றினை அமைத்து ஏழைச் சிறார் கல்வி கற்க வழி வகுத்தீர்கள். எமது கிராம மத்தியில் உள்ள கட்டட வசதி அற்ற சிறிய ஆரம்ப பாடசாலைக்குக் கட்டடம் அமைக்க ரூபா 20,000 (இருபதாயிரம்) அரசினரிடம் இருந்து பெற்றுத் தந்தீர்கள். கைத்தொழில் நிறுவனம் ஒன்றை அமைத்து எண்ணெய் வடித்தல், நெசவு செய்தல் போன்ற அபிவிருத்தி வேலைகளுக்கு ரூபா 25,000 (இருபத்தையாயிரம்) ஒதுக்கீடு செய்து திட்டத்தை ஆரம்பித்து வைத்தீர்கள்.

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லியவண்ணம் செயல்"

என்ற வள்ளுவர் வாக்கிற்குச் சவால் விடுத்துச் சொல்ல வல்லவனும் சொன்னதைச் செய்ய வல்லவனும் யான் என்பதனை யாவரும் உணர்ந்து கொள்ளக் காட்டி வருகின்றீர்கள்.

ஐய,

தங்களுக்கும், தங்கள் அரும்பணிக்குத் தோளோடு தோள்கொடுத்துதவும் மதியூக மந்திரியான அம்மையார் திருமதி தியாகராசாவுக்கும் எங்கள் அன்புமிக்க பல்லாண்டு வாழ்த்துக்களைக் கூறிக்கொள்ளுகின்றோம்.

வாழ்க நும்பணி! வளர்க நும் வாழ்வு.

# "சேவையின் சின்னமாய்த் திகழ்ந்து வாழியவே"

— டாக்டர் அல்போன்சஸ் அத்தனுசியார் —

எமது மதிப்பிற்குரிய பெரியார் திரு. ஆ. தியாகராசா M. A. M. Litt அவர்கள் மணிவிழாவை யொட்டி வெளியாகும் மலருக்குச் சிறு செய்தி அளிப்பதில் பெருமகிழ்வு கொள்கிறேன்:

"நன்றி மறப்பது நன்றன்று" என்ற முதுமொழிக்கேற்ப வட்டுக்கோட்டைத் தொகுதி மக்களிற் பெரும்பாலார் இம் மணிவிழா, இப்பெரியார் தமது தொகுதியிலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் ஆற்றியுள்ள மகத்தான சேவையை என்றும் மறவா நன்றிக் கடப்பாட்டுடனே அன்னாருக்குத் தங்கள் பாராட்டைத் தெரிவிப்பதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது குறித்துக் களிபேருவகை எய்துகிறார்கள்.

நிலையான பொருளாதார சுபீட்சமே நாட்டின் வருங்கால வாழ்விற்கு முக்கியம் என்பதை நன்குணர்ந்த நம் பெரியார் தேசிய பேரவையிலும் அதற்கு வெளியேயும் அந்நோக்கத்திற்காகப் போராடி வருவதுமட்டுமன்றி, அதைச் செயற்படுத்துவதற்காகத் திட்டவட்டமான வழிகளை வகுத்து நாட்டு மக்களைக் குறிப்பாக வட்டுக்கோட்டைத் தொகுதி மக்களை அந்தச் சுபீட்சமான பாதையிலிட்டுச் செல்கிறார் என்பதற்கு, அவர் கடந்த ஆறு ஆண்டுகளாக ஆற்றிவரும் அரும்பணிகள் சான்று பகர்வனவாய் இருப்பது தெரியவரும்.

"மூன்று நேர உணவை எம்மக்கள் பூரணமாகப் பெறவேண்டும். பசி, பட்டினியிலிருந்து மக்களை நான் காப்பாற்றவேண்டும்" என அவர் அடிக்கடி கூறும் ஆணித்தரமான வார்த்தைகள் எம் மனதை விட்டகலா.

அரசியல்துறையிலும் சரி, வாழ்க்கையின் இன்பதுன்பங்களிலும் சரி, நம் பெரியாருக்குப் பக்கபலமாகத் தோளோடுதோள் நின்று உழைத்துப் பெருவெற்றியை ஈட்டித் தந்த பெருமை, அவரது அன்புப் பாரியார் திருமதி மகேஸ்வரி தியாகராசா அவர்களையே சாருமென்றால் அது மிகையாகாது.

எங்கள் பெரியார் அவர்கள் தம் மனைவி மக்களுடன் பல்லாண்டு சிறப்புற வாழ்ந்து, தமது தாராளமான சேவையை எமது நாட்டிற்கும், சிறப்பாக வட்டுக்கோட்டைத் தொகுதி மக்களுக்கும் செவ்வனே ஆற்ற எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி நிற்கிறேன்.

# தமிழ்ப் பெருங்குடி மக்களின் நன்மைக்காக உழைக்கும் பெரியார்

அருள்நெறித் தொண்டர் திரு. கே. கே. சுப்பிரமணியம் அவர்கள்
(சுங்க இலாகாச் சிரேட்ட விலை வரிமதிப்பீட்டாளர்)
(அகில இலங்கை இந்துமாமன்ற முகாமைக்குழு உறுப்பினர்)

திரு. ஆ. தியாகராசா அவர்களின் மணிவிழாவையொட்டி ஒரு மலர் வெளியாவது குறித்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். தியாகராசா அவர்கள் காரை இந்துக் கல்லூரி அதிபராக 1948ம் ஆண்டு தொடக்கம் 1970ம் ஆண்டு வரை மகத்தான சேவை புரிந்தார். கல்வி, சமூகம் முதலிய பலவேறு துறைகளில் அவர் ஈட்டிய வெற்றிகள் அளப்பரியன. அவருடைய தன்னலமற்ற தொண்டின் பயனாக 1970ம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தொகுதி வாழ் மக்கள் சார்பில் தேசிய அரசுப் பேரவை புகுந்தார்; இன்று வரை இரவு பகலாக ஒய்வொழிவின்றித் தமிழ்ப் பெருங்குடி மக்களின் நன்மைக்காக உழைத்து வருகின்றார்.

சைவத் தொண்டனும் கன்னியவானுமாகிய இவர், பொதுமக்கள் பலரதும் பாராட்டைப் பெற்றவர். இவரை அமைச்சர்களும், தேசியப் பேரவை உறுப்பினர்களும் மற்றும் எதிர்க்கட்சி அங்கத்தவர்களும் பலவேறு சந்தர்ப்பங்களில் சிலாகித்துப் பேசியதை நன்கு அறிவேன்.

எல்லாம் வல்ல சௌந்தராம்பிகை சமேத சுந்தரேசனின் இன்னருளால், தியாகராசா அவர்களும் குடும்பத்தாரும் எல்லா நலங்களும் பெற்றுப் பல்லாண்டு வாழ எனது சார்பிலும் கொழும்பு வாழ் காரை மக்கள் சார்பிலும் வாழ்த்துகின்றேன்.

# எளிமையான வாழ்வினர்

— சுழிபுரம். கா. அரிச்சந்திரா அவர்கள் —

''தோன்றிற் புகழொடு தோன்றுக'' என்னும் ஆன்றோர் வாக்கிற்கு இணங்க நேர்மை, நீதி, அன்பு, அறம், பண்பு, அரசியல் ஞானம், இரக்கம் என்பன நிறைந்த எமது தியாகராசா அவர்கள், எளிமையான வாழ்வினர்; கம்பீரமான நடையும் தியாக சிந்தையும் படைத்தவர். மக்கள் சேவைகளை நிறைவேற்ற இவர் ஏறி இறங்காத அலுவலகங்கள் இல்லை என்றே கூறவேண்டும். இங்ஙனம் பிறர்நலத்திற்காக உழைத்து வரும் இவர்களும், குடும்பத்தாரும் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றேன்.

# தேசப்பணியே பெரும் பணியாய்க் கொண்டவர்

## — திரு. இ. பேரம்பலம் அவர்கள் —

(ஓய்வு பெற்ற அதிபர் - சித்தன்கேணி)

எமது வட்டுக்கோட்டைத் தொகுதித் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர், உயர்திரு ஆ. தியாகராசா எம். ஏ., எம். லிட். அவர்களே,

தாங்கள் ''சொலல் வல்லன் சோர்விலன் அஞ்சான்'' என்னும் வள்ளுவர் வாக்கிற்கிலக்கானவராய், மனமும் வாக்கும் ஒன்றிணைந்து செயல்படும் தீரராய், ''சொல்லியவண்ணம் செயல்'' என்னும் அரிய வாக்கினின்றும் பிறழாதவராய், அயராது உறங்காது களையாது இளையாது தேசப்பணியே பெரும்பணியாகக் கொண்டவராய், தாங்கற்ற நூலளவேயாகுமாம் நுண்ணறிவு'' என்பதை தங்கள் செயல் மூலம் காட்டுபவராய், ''செயற்கரிய செய்வர் பெரியர்'' என்னும் மணிவாக்கின் உறைவிடமாய் எமது தொகுதி மக்களின் தவப் புதல்வனாய் எம் மத்தியில் மலை விளக்கெனத் திகழ்வது கண்டு இறும்பூதெய்துகின்றோம்.

தங்கள் தேசப்பணி வளர்பிறைபோல் வளர்ந்து, முழுமதியின் தண்ணொளி போல் எங்கள் மத்தியில் மிளிருவதற்கும், என்றும் கண்டிராத முன்னேற்றத்தை எமது வட்டுக்கோட்டைத் தொகுதி பெற்றதன்றி, இன்னும் பல்லாண்டு காலம் எமது தொகுதித் தேசியப் பேரவை உறுப்பினராய் அமர்ந்திருந்து பொதுவாக நாட்டுக்கும் தமிழுக்கும், சிறப்பாக எமது தொகுதிக்கும் பணியாற்றி எம் மெல்லோரையும் மகிழ்ச்சிக் கடலில் திளைக்கச் செய்வதற்கும் எமது கிராம மக்கள் சார்பாக ''நீடுழி வாழ்க'' என வாழ்த்தி தங்களுக்கும் தங்கள் குடும்பத்துக்கும் நற்சுகமும் நல்வாழ்வும் அளிக்கும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவனை இதய பூர்வமாக இறைஞ்சுகின்றோம்.

வணக்கம்.

# அராலியம்பதி பொலிவுடன் வாழப் பணிபுரிந்தவர்

## — திரு. இ. நாகலிங்கம் அவர்கள் —

(தலைவர், அராலி கிராமசபை)

தொகுதியின் நலனும் அன்னை மொழியின் உரிமையும் காக்கும் திரு. தியாகராசா அவர்கள், அராலியம் பதியில் சிறுர் மகிழ்ந்திடப் பொது விளையாட்டிடமும் தொழில் சிறக்க, இருள் அகல மின் இணைப்பும் வைத்தியசாலையில் மருத்துவ பனையும் உவர்நீர் அகற்ற நன்னீர்த் திட்டமும் ஏற்பாடுசெய்து தந்தார்கள். மேலும் வீதிகளை விரிவாக்கியும், சுகாதாரசேவையை விஸ்தரித்தும் மண்வீதிகளை தார்வீதிகள் ஆக்கியும் உதவினார்கள். இவையன்றி அராலி இந்துவுக்கு எழில்மிகு மாடங்களும், சரஸ்வதிக்கு நிலம் பெற்று நிரை நிரையாக வகுப்பறைகளும், விஞ்ஞானகூட உபகரணங்களும், முருகமூர்த்திக்கு மதிலும் புதிய கட்டடமும் வழங்கினார்கள்; மேலும் பல ஆக்கப்பாடுகள் புரியப் பல திட்டங்களை வைத்திருக்கின்றார்கள். அவர்களும் மனையாளும் நீடுவாழ அராலி வாழ் மக்கள் சார்பிலும் என் சார்பிலும் வாழ்த்துகின்றேன்.

# வட்டுக்கோட்டைத் தொகுதிக்கு வாய்த்த உறுப்பினர்

— திரு. அ. சின்னையா அவர்கள் ஜே. பி. —

(சுழிபுரம்)

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே" என்பது ஔவை வாக்கு. நல்லாரை எங்கும் காணமுடியாது; எப்பொழுதும் காணமுடியாது; அவரைக் காண்பதே அரிய பேறு, அந்த அரியபேறு 1952ம் ஆண்டு எனக்குக் கிட்டியது, ஒரு நல்ல மனிதனை அறிந்து பழகும் சந்தர்ப்பத்தை அன்று பெற்றேன்.

அந்த நல்ல மனிதர் நாட்டுக்கு நல்லவர். நாட்டு மக்களின் பொருளாதார நல் வாழ்விற்கு நல்லவர். சமத்துவமும் சகோதரத்துவமும் நாடு முழுவதும் பீடு நடை போடவேண்டும் என்று பெரிதும் ஆசைப்படுபவர். அவ்வித நல்ல ஆசை கொண்ட ஆறுமுகம் தியாகராசா அவர்களை அன்றுதான் கண்டேன்.

காலம் உருண்டோடியது. தியாகராசா அவர்கள் காரைநகர் இந்துக் கல்லூரியில் அதிபராய் இருந்து தமது திறமை மிக்க நிர்வாகத்தின் மூலம் மாணவ சமுதாயம் சீரிய வருங்காலத்தைக் காண உதவினர், அந்தக் காலந்திலே இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி குறித்து விரிவான ஒரு நூலை எழுதி முடித்தார். பல நூறு பக்கங்களைக் கொண்ட அந் நூல் பொருளாதாரம்பற்றிய அவரது நுண்மாண் நுழைபுலத்தையும், எப் பிரச்சினையையும் எடுத்துக் காட்டுவதாயுள்ளது.

கல்விப் போதனையிலும் ஒழுக்க மிக்க மாணவரை உருவாக்குவதிலுமே அல்லும் பகலும் ஈடுபட்டிருந்த அவரது உள்ளம் தமது சேவை, மாணவ சமுதாயத்தினரோடு நில்லாது மீண்டும் மக்கள் சேவையாக, தேசிய சேவையாக விரிவடைய வேண்டுமென வேணவாக் கொண்டது. அவ் விருப்பமே 1970 ஆம் ஆண்டு நிகழ்ந்த தேர்தலில் தேசியப் பேரவையின் வட்டுக்கோட்டைத் தொகுதி வேட்பாளராக நின்று போட்டியிடச் செய்தது. அத் தேர்தலில் நமது தொகுதி மக்கள் அந்த நல்ல சேவையாளரைத் தேர்ந்தெடுத்தார்கள். அதிட்டசாலிகளுமானார்கள்.

சிந்தனையில் நல்லனவற்றைச் சிந்திப்பவர்கள் செயலிலும் அந்த நல்லனவற்றையே செயற்படுத்துவார்கள். செல்வம், பதவி, முதலியனவற்றால் தமது நிலை உயர்ந்த காலத்திலும் மக்களது பிரதிநிதியெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட காலத்திலும் அவர்களது மனம் நல்லதாயும் செயல்கள் சீரியனவாயுமே திகழும். இதற்கு உதாரண புருஷர் எங்கே உளர்? யார் உளர்? என்று தேடத் தேவையில்லை. தேசியப் பேரவை உறுப்பினர் ஆறுமுகம் தியாகராசா அவர்களே இருக்கிறார்கள்.

தமிழ் மக்களின் மொழியுரிமை முதலியன பாதுகாக்கப் படவேண்டும் என்பது ஒவ்வொரு தமிழ் மகனதும் தலையாய கொள்கை. அவ்வுரிமைகளைப் பெறுதற்கும் பேணிக்காத்தற்கும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நெறியை நாடுவர். அந்நெறிகளுள் ஒன்று அறநெறி மற்றையது மறநெறி. ஆறுமுகம் தியாகராசா அவர்களது நெறி அறநெறியாம் அன்பு நெறியே. சகோதரரான இரு இனத்தவர் தாய் நாடெனப் போற்றிக் கூடி வாழும் ஒருநாட்டில் அன்பு நெறியைத் தவிர வேறு நெறிக்கு

இடமில்லை என்பது நமது தொகுதி உறுப்பினர் அவர்களின் அழுத்தமான கொள்கை. பிணங்கி நின்று உரிமைகளைப் பெறுவதைவிட ஒருவரோடு இணைந்து நின்று உரிமைகளை மட்டுமன்றி உலகினையே வசமாக்கலாம் என்பர்.

வாடி மடிந்த செடி கொடிகள் மழை வந்ததும் தழைத்துப் பூக்கும்; வரண்டிருக்கும் குளம் முதலியன வாய் நிரம்பி நீர் வழிந்தோடும்; மக்களும் மற்றைய உயிர்களும் தாகமும், பசியும் தீர்ந்து ஓகை எய்துவர்; அதுபோலத் தேசியப்பேரவை உறுப்பினராகத் தியாகராசா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட நாள்முதல் வட்டுக்கோட்டைத் தொகுதி வளர்ச்சியடைதற்கான நல்ல மாற்றங்களை அடைந்தது

மக்களின் நாளாந்த வாழ்விலே வசதிகளும் வருவாய்க்கான துறைகளும் மலிந்தன. புதிய மண்டபங்களுடன் பாடசாலைகளும் பொலிவுற்றன; வரட்சியான வயல்களில் நன்னீர்க் கிணறுகள் நீர் சுரந்தன.

புதிய பாதைகளிலே வசுப் போக்கு வரத்து வசதி உதயமானது. பல்லாண்டு பல்லாண்டு காலமாக இரவில் இருளில் மூழ்கிக்கிடந்த வீதிகளெல்லாம் மின்னொளி பெற்று விளக்கமெய்தின. யாழ்ப்பாணக் குடா நாடே வியந்து நோக்கும் வகையில பிரமாண்டமான வசு டிப்போவும், வசு எந்திர உறுப்புத் தொழிற்சாலையும் கட்டப்படுகின்றன;

வேலையற்ற இளைஞர் வேலைவாய்ப்புப் பெற்று மகிழ்கின்றனர். குடிமையற்ற மீனவர் குடியிருப்புப்பெற்றுக் கூடித்தொழில் நடத்தும் புதுமுறை வாய்ப்பினைப் பெற்றனர்.

வாழ்க தியாகராசர் வளர்க அவர் பணி.

# என்றும் இல்லாத வகையில் சேவை செய்து வருபவர்

வட்டுக்கோட்டை,

— திரு. து. விசுவநாதன் பி. எஸ். சி கல்வி டிப்ளோமா அவர்கள் —

திரு. தியாகராசா அவர்கள் இந்துக் கல்லூரியில் அதிபராக இருந்த காலத்தில் மாணவனாக இருக்கும் வாய்ப்பைப் பெற்றவன். இவரது அயரா உழைப்பினால் அப்போது கற்ற பலர் இலண்டன் மற்றிக்குலேசன் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சித்தியடைந்தோம்.

இவர் காலத்துக்குக் காலம் வெளியிட்டு வந்த அறிக்கைகளும், துண்டுப் பிரசுரங்களும், வெளியீடுகளும் கூட்டிய கூட்டங்களும் செலவு செய்த பணமும் நேரமும் இவர் சமுதாயத்திற்குச் செய்த சேவையின் பிரதிபலிப்பாகும்.

சோஷலிச நாடாக இயங்குவோம் என்று அரசாங்கம் எடுத்த சங்கற்பமும், பன்முகப்படுத்தப்பட்ட வரவுத் செலவு திட்டமும் பல்லாண்டுகளாகத் திரு. தியாகராசா அவர்கள் மனதில் உருவாகி வந்த பிரதான திட்டங்களாகும். இவர் என்றுமில்லாத வகையில் தனது தொகுதி மக்களுக்குச் சேவை செய்து வருகின்றார்.

தியாகராசா அவர்கள் நீடுழி வாழி.

# இலட்சியத் தம்பதிகள்

— சுழிபுரம் ஆசிரியர் திரு. மு. தம்பிஐயா —

இறைவன் அருளால் எல்லாப் பேறுகளும் பெற்றுச் சுகமுடனும் சிறப்புடனும் வாழ்ந்துவரும் திரு. ஆ. தியாகராசா அவர்கள் தங்கள் மணிவிழாக்காணும் காலத்தில் பொதுசேவையில் பலருக்காகச் சேவையாற்றக்கூடிய ஓர் வாய்ப்புக் கிடைத்தது, இன்று யாவரும் இவர்களைப் பாராட்டுவதும், போற்றுவதும் வாழ்வில் கிடைத்த அரும் பேறாகும்.

திரு ஆ. தியாகராசா அவர்களிடமும், இவரது பாரியாரிடமும் நான் பல வகையான சிறப்புக்கள் நிறைந்துள்ளதை கண்டுள்ளேன். போற்றுபவர்கள் போற்ற, தூற்றுபவர்கள் தூற்ற தாம் எடுத்த காரியத்தைக் கண்ணாயிருந்து நிறைவேற்றி வைக்கும் பண்புடையவர்களான இவர்கள் சிறப்புடன் வாழ்ந்து சேவை செய்து பருத்தித்துறை முருகன் எல்லாச் சுகங்களையும் கொடுக்க வேண்டும்.

தம்மை நாடி வரும் யாவருக்கும் அவரவர் வேண்டிய தேவைகளை வேண்டிய அளவு நிறைவேற்றிவரும் இவர்கள் இலட்சிய தம்பதிகளாக நீண்டநாள் வாழ்ந்து இன்பமடைய பருத்தித்துறை முருகன் அருள் கிடைக்க வேண்டுகின்றேன்,

# தியாகச் செம்மல் தியாகராசா வாழ்க!

— மாதகல் கந்தசாமி —

இன்று அறுபதாண்டு அகவையை எட்டி மணிவிழாக் கொண்டாடும் பேறுபெற்ற பெருந்தகை திரு ஆ. தியாகராசா அவர்கள் ஒப்பற்ற ஓர் ஆசிரியர், தலைசிறந்த ஓர் அதிபர்; தன்னலமற்ற தொழிற் சங்கவாதி; நாட்டுயர்வுக்கு ஓயாது உழைக்கும் கூட்டுறவாளர்; சமரச நோக்குடைய சமூகத் தொண்டர்; கல்விமான், கலா ரசிகர், பொருளாதார நிபுணர், ......

1970ல் வட்டுக்கோட்டைத் தொகுதி தேசியப் பேரவை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டது முதல் அவர் அத்தொகுதி மக்களின்

"நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனுமாய்,
பண்பிலே தெய்வமாய் பார்வையிலே சேவகனாய்" (பாரதி)

நின்று, அத்தொகுதியின் அரசியல், பொருளாதாரம், தொழில், விவசாயம், கல்வி, கலாசாரம், போக்குவரத்து, சுகாதாரம், குடிநீர் விநியோகம், மீன்பிடி முதலிய சகல துறை அபிவிருத்திக்கும் அவர் செய்துள்ள சாதனைகள் அவருக்கு முந்திய அத்தனை பாராளுமன்ற வாதிகளும் சாதித்தவற்றிலும் பார்க்க கூடுதலானவை, சிறந்தவை, உயர்ந்தவை என்றால் மிகையாகாது.

இந்தியாவில் கல்வி பயின்றுவரும் காலத்தில் இந்திய சுதந்திர இயக்கத்தால் ஆகர்சிக்கப்பட்ட அவர் இலங்கையின் தேசிய விடுதலை இயக்கத்திலும் தீவிரமாக ஈடுபட்டார். இந் நாட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் தேசிய இனங்களின் ஐக்கியத்துக்காக அரும்பாடு பட்டார். இன்றும் ஏகாதிபத்தியவாதிகளை இங்கிருந்து வெளியேற்றி, சுதந்திரமான தேசிய பொருளாதாரத்தை கட்டி வளர்க்க இடையறாது உழைத்து வருகின்றார்.

தமக்குள்ள செல்வம், மாண்பு, சீர், சிறப்பு, நற்கீர்த்தி, கல்வி அறிவு அனைத்தையும் நமது தேசத்தின் சோஷலிஸ மறுமலர்ச்சிக்காக அர்ப்பணித்து வாழும் தியாகச் செம்மல் தியாகராசா அவர்களை தமது தே. பே. உறுப்பினராக பெற்றுள்ளமை, வட்டுக்கோட்டை மக்களைப் பொறுத்தவரையில் ஓர் வரப்பிரசாதமாகும்.

இத்தகைய புரட்சிகர ஜனநாயகவாதியின் சீரிய சேவையை இத்தொகுதி மக்கள் மட்டுமல்ல, இலங்கை மக்கள் அனைவரும் பெற்று அனுபவிக்க, அன்னார் சட்டசபை மணவிலும் பல்லாண்டு வாழ வேண்டும் என மனமார வாழ்த்துகின்றேன்.

# புதியதோர் ஒப்பற்ற சமுதாயத்தைப் படைக்க விழைபவர்.

— புதுமைலோலன் —

'இன்றைய அரசியல் சூழ்நிலையில் தமிழ் மக்களின் நிராதரவான நிலை கண்டும் இத்தொகுதியின் முன்னேற்றத்திற்கு வழிவகைகள் வகுக்கப்படாத குறை கண்டும் நான் இந்நிலைகளை மாற்றுவதற்கு என்னால் இயன்றளவு சேவையாற்றுவதே எனது நோக்கமாகக்கொண்டு போட்டியிட முன்வந்துள்ளேன். தேசிய ரீதியில் ஒத்துழைக்க வேண்டும். கைத்தொழில் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் ஊக்கமளிக்கப்படவில்லை, போதிய கவனம் எடுக்கப்படாமையால் வட்டுக்கோட்டைத் தொகுதி அபிவிருத்தி அடையவில்லை நான் உங்களது முழுநேர ஊழியனைக் கடமையாற்றுவேன்.'' இவ்வாறு 1970ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலின்போது திரு. ஆ. தியாகராசா கூறினர். தாம் கூறியவற்றைச் செயலிலும் காட்டி வருகின்றார்.

17-4-1916 இல் யாழ்ப்பாணத்துக் காரைநகர் தங்கோடையைச் சேர்ந்த சண்முகம் ஆறுமுகம் என்பவருக்கும் துணைவியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை அமிர்தவல்லி என்பவருக்கும். எதிர்காலத்தில் நாட்டை உயர்த்தும் புதல்வன் ஆறுமுகம் தியாகராசா பிறந்தார்.

தகப்பனர் மலாய் நாட்டில் உத்தியோகம் வகித்து வந்தார். தன்சொந்த நாட்டிலே புத்திரன் கல்வி கற்கவேண்டுமென்று கருதி 8 வயதில் பேரன் பேர்த்தியுடன் யாழ்ப்பாணத்தில் இருந்து படிக்க ஆவன செய்தார்; இரண்டு ஆண்டுகள் கல்விகற்ற அவர் பத்துவயதில் சென்னை அடையாறு சென்று படித்தார்.

1932-ம் ஆண்டு 'சீனியர்' பரீட்சையில் சித்தி பெற்ற அவர் 1934-ம் இன்ரர் சயன்ஸ் (Inter Science) லிலும் 1936ல் பீ. ஏ. பரீட்சையிலும் 1938 எம். ஏ. பரீட்சையிலும் சித்தி பெற்றார்.

வெகுவேகமாகப் பரீட்சையில் சித்தி அடைந்த விவேகமான மாணவன் தியாகராசா 1938ம் ஆண்டு எம். ஏ. பட்டதாரியான பிற்பாடு சிங்கப்பூர் சென்று 1940ம் ஆண்டு வரை சிங்கப்பூர் வைத்தியக் கல்லூரியிற் படித்தார்;

அறிவுக்குச் சிகரம் வைத்ததுபோல ஆராய்ச்சி நூல் எழுதி 'எம். லிற்.' (M. Litt) பட்டம் 1941ம் ஆண்டில் பெற்றார்.

அறிவிற்கும் அவர் பண்பிற்கும் சிறந்ததான ஆசிரியர் வேலையில் 1941ம் ஆண்டு சேர்ந்தார். ஆசிரியராகி ஓராண்டிற்குப் பிற்பாடு தமிழ்ப் பண்பும் தொண்டு மனப்பான்மையும் கொண்ட தங்கோடையைச் சேர்ந்த சிவகுருநாதர் மகேஸ்வரி அவர்களை வாழ்க்கைத் துணைவியாகப் பெற்றுக் கொண்டார்.

வாழ்வு வளமாக ஐந்து குழந்தைகளை நாட்டுக்கு அளித்தார்: திலகவதி, புனிதவதி, மங்கையர்க்கரசி, ஞானசம்பந்தர், வேணுகோபால் என்போரே அவர்கள். பிள்ளைகளுக்கு இட்ட பெயர்களில் இருந்தே அவரது சமயபக்தி தெளிவாகின்றது.

1945ம் ஆண்டு அதிபர் பதவி ஏற்ற இவர் காரைநகர் இந்துக் கல்லூரியை இன்றைய உயர்தரத்திற்குக் கொண்டுவர ஒவ்வொரு நிமிடத்தையும் செலவு செய்தார். அவரிடம் கல்விகற்ற மாணவர்கள் இலங்கை பூராவும் பல உயர் பதவிகளில் கடமையாற்றி வருவதைக் காணலாம்.

1970ல் ஆண்டில் இளைப்பாறிய அவர் அவ்வாண்டே மக்கள் பிரதிநிதியாக வட்டுக்கோட்டைத் தொகுதிக்குத் தெரிவு செய்யப்பட்டார்.

1951 தொடக்கம் 1957ம் ஆண்டு வரை காரைநகர் கிராமச் சங்கத் தலைவராக மக்களுக்கு உழைத்த அவரை இன்னும் உழைப்பதற்காக வட்டுக்கோட்டைப் பிரதிநிதியாக்கினார்கள், மாணவனாக இருந்த காலங்களில் சங்கீதம், சித்திரம், நாடகம் சாரணர் இயக்கம், விளையாட்டுக்கள் என்பனவற்றில் பல பரிசில்களைப் பெற்ற இவர் தன் தொகுதி பல பொருளாதாரப் பரிசுகளைப் பெறுவதற்காக இன்று பாடுபடுகின்றார்.

இந்தியாவில் கல்வி கற்ற காரணத்தால் அங்குள்ள பெரியார்களையும் அறிஞர்களையும் சந்திக்கும் வாய்ப்பும் நல்ல இயக்கங்களை நேரில் பார்த்து அனுபவிக்கும் வாய்ப்பும் இவருக்குக் கிடைத்தன. இடதுசாரிக் கொள்கையில் பற்றுக்கொண்ட இவர் பொருளாதார முன்னேற்றம் ஒரு நாட்டிற்கு முதல் அத்தியாவசியமானது என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்.

முழுநேர ஊழியனாக நாடு வளங்காண தன் இனமும் தேசிய இனங்களும் கை கோர்த்து புதியதோர் ஒப்பற்ற சமுதாயத்தைப் படைக்க விழையும் தியாகராசா அவர்கள் எதிர்காலத்தில் அந்நிலையினை உருவாக்கியே தீருவார். தியாகராசா அவர்களின் வாழ்வும் நாட்டுச் சேவையும் வேறானவை அல்ல.

மணிவிழாக் காணும் அவர், இன்றும் சுறுசுறுப்புடன் இளைஞராகவே கடமையாற்றுவதைக்கண்டு முற்போக்கு உள்ளங்கொண்ட அனைவரும் மகிழ்கின்றனர்; போற்றுகின்றனர். நீடுவாழ வாழ்த்துகின்றனர்; ஏனெனில் அவர் வாழ்வில் நாட்டின் வாழ்வு பின்னிக்கிடக்கின்றது.

அவர் நீடூழி வாழி.

# தேசிய ஒருமைப்பாட்டை வளர்ப்பவர்

— கி. துரைசுவாமி —

(இளைப்பாறிய அதிபர், வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டைத் தொகுதித் தேசியப்பேரவை உறுப்பினர் உயர்திரு. ஆ. தியாகராசா எம். ஏ., எம். லிற், அவர்கள் உயர்ந்த நன்நோக்குடையவர் செயற்றிறன் மிக்கவர். மக்களுக்குப் பணிசெய்வதில் நிறைந்த ஆர்வமுடையவர். தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்பவர்; "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பதற்கு இலக்கியமாகத் திகழ்பவர்.

தேசிய ஒருமைப்பாட்டில் மற்றும், முற்போக்குச் செயல்களில் உத்வேகமுங் கொண்டு அயராதுழைப்பவர்.

இவர் சேவைகள் கல்வி, விவசாயம், கைத்தொழில், உத்தியோகம் ஆகிய பல்வேறு துறைகளில், முன் எப்போதும் கண்டிராத பல சீரிய வளர்ச்சிப் பயன்களை வட்டுக்கோட்டைத் தொகுதி அடைந்திருக்கிறது. மேலுமடையுமென மக்கள் நம்புகின்றனர்.

பணமோ, பதவிப் பெருமையோ, புகழோ வேண்டாது மக்கள் பணியே மகேசன் பணி என்று தன்னாலாய அனைத்தும் செய்துள்ளவர் இந்த நல்லவர். வல்லவர் இன்னும் பல்லாண்டு நீடூழி வாழ்ந்து தனது இலட்சிய நோக்கை நிறைவேற்ற இறைவன் இன்னருள் புரிவாராக.

# கண்டதும் கேட்டதும்

"அவதானி"

வட்டுக்கோட்டைத் தொகுதித் தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் திரு. ஆ. தியாகராசா M. A. M. Lit. அவர்களின் வாழ்க்கைக் குறிப்புக்கள் மிகவும் சுவாரஸ்யமானவை. சேவா மனப்பாங்கும், கல்வி நாட்டமும், கலாரசனையும், அடிமைத்தனத்தையும், முதலாளித்துவத்தையும் எதிர்த்துப் போராடும் மனப்பக்குவமும் அவருக்கு இயல்பாகவே அமைந்துள்ளன. இத்தகைய இயல்புகள் வரக் காரணமாயிருந்தவை எவையென்பதனை இங்கு மிகச் சுருக்கமாகத் தருகின்றேன்.

## இளமைப் பருவத்தில் . . .

தியாகராசா அவர்களது தந்தையார் மலாயா தேசத்தில் பொறுப்பான பதவியிலிருந்தார். தமிழ், சைவம் என்னும் இரண்டின் மீதும் தீவிரமான பற்றுக்கொண்ட அப்பெரியார் சங்கீதம், நடனம், விளையாட்டுத்துறை என்பவற்றிலும் அதிக நாட்டம் கொண்டவர். சங்கீதரசனையின் நிமித்தம் அவர் இசை நூல் எதனைக் கண்டாலும், எவ்வளவு பெரிய தொகை விலையானாலும் வாங்கிவிடுவாராம்; அவர் தமது புதல்வர் தியாகராசாவும் இத்துறைகளில் மேம்பட்டு விளங்கவேண்டுமென்று விரும்பினார். அதன் பயனாகத் தியாகராசா பத்து வயதுச் சிறுவராக இருக்கும்போதே இந்தியாவுக்குக் கல்வி பயில அனுப்பப்பட்டார். முதலில் கவியரசர் ரவீந்திரநாததாகூர் நிறுவிய சாந்திநிகேதன் செல்லவிருந்த அவரை, அவரது வயதுக்குறைவு காரணமாகச் சென்னை அடையாறு கலாசேத்திரத்தில் கல்வி பயில அனுமதித்தனராம். அந்த இளம் வயதிலேயே கலைக்கோயிலான கலாசேத்திரத்தில் பெற்றுக்கொண்ட கலாரசனையை இன்றும் தியாகராசாவிடம் கண்டு வியக்கலாம். தியாகராசா கல்வி பயின்ற காலம் இந்திய சுதந்திரப் போராட்டம் உச்சநிலையை அடைந்த காலம்; தேசபக்த சிரோமணிகள் தன்னலம் துறந்து நாட்டுக்காகப் போராடிய காலம்; சாதி, மத, இனப் பூசல்களை மூட்டைகட்டிவிட்டுப் பாரத தேசத்தின் வாழ்வுக்காக அண்ணல் காந்தியடிகளின் தலைமையில் அணிவகுத்து நின்ற காலம்; தேசீய ஒருமைப்பாட்டின் சிகரமாக விளங்கிய காலம். அந்தக் காலத்தில் - அந்தத் திருப்பங்களிலெல்லாம் பங்குகொண்டு, படிப்பையும் முடித்துக்கொண்டு பட்டதாரியாகத் தாயகம் திரும்பிய தியாகராசா ஒரு புரட்சிகர மனிதராகத் திகழ்வதில் வியப்பில்லையன்றோ! விளையாட்டுத் துறையிலும் அவர் திறமைசாலி, ஹாக்கிச் சம்பியனாக விளங்கியவர். சிறந்த விளையாட்டுத்துறை விமர்சகராகவும் இன்றைக்கும் விளங்குகிறார்.

'அன்பர்பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே"



அன்பர் ஒருவரின் அல்லல் தீர்க்க அதிகாரிகளுடன் தொடர்பு கொள்கிறார்.

''இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக்கடை''



நாயகற்காய் நற்பணி புரிகின்றார்

## அதிபர் பதவியில் . . .

*M. A., M. Lit.* பட்டதாரியாக நாடு திரும்பிய இளைஞர் தியாகராசா அவர்கள் இந்திய நாட்டின் அனுபவச்சாயலில் தமது நாட்டையும் மக்களையும் தரிசித்தார். ஆசிரியராக, அதிபராகக் காரைநகர் இந்துக்கல்லூரி அவரை அழைத்தது. அந்த அழைப்பை ஏற்றுக் கல்விப்பணியிலும், சமய சமூகப்பணியிலும் தீவிரமாக ஈடுபட்டார். பல்லாயிரக் கணக்கான மாணவ, மாணவியரின் அறிவுக்கண்களைத் திறந்தார். இனம், மதம், ஏழ்மை, செல்வம் என்ற பேதங்களற்ற அபேதவாதியாக அருந்தொண்டாற்றினார். இன்று இலங்கையின் எப்பாகத்திலும் அவரது மாணவர்கள் பல துறைகளிலும் முன்னின்று ஒளிவிடுவதனைக் காணலாம். 'கைம்மாறு கருதாப் பணிக்கு ஒரு தியாகராசா' என்பதனை மாற்றுக் கருத்துள்ளோரும் மறுக்க முடியாத வகையில் அவர் செய்த சேவைகள் வட்டுக்கோட்டைத் தொகுதியில் சிறப்பாக விளங்குதலைக் குறிப்பிட்டேயாக வேண்டும்.

## அரசியல் வாதியாக . . .

தியாகராசா அவர்கள் பட்டதாரியாக வெளிப்போந்தபோதே அரசியல்வாதியாகத்தான் இருந்தார். ஆனால் நாடு அதனைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அவரும் அதனைத் தெளியவைக்க விரும்பவில்லை: ஆனால் 1970 ஆம் ஆண்டுத் தேர்தலில் அவர் ஈட்டிய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வெற்றி அவரை அரசியல்வாதியாக மாற்றிக் காட்டியது. அவர் அறிவுபூர்வமான அரசியல்வாதி. பொருளாதார சமத்துவநோக்குடைய அரசியல் வாதி: தேசிய ஒருமைப்பாட்டுணர்வுள்ள அரசியல்வாதி. தமது மக்களையும், தேசத்தையும், மொழியையும் ஒருசேர நோக்குகின்ற அரசியல்வாதி; இன்னும் ஒடுக்கப்பட்ட அடக்கப்பட்ட மக்களுக்காகக் குரல்கொடுக்கும் அரசியல்வாதி; பாராளுமன்றம் சில, சில பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கக்கூடிய ஒரு விவாத மன்றமே தவிர மொழியையும் நாட்டையும் கட்டிக்காக்கும் காவல் அரண் அல்ல என்பதனைத் தீர்க்கமாகத் தெரிந்துகொண்டுள்ள அரசியல்வாதி. தாம் நம்பாத ஒன்றை மற்றவர்களை நம்ப வைக்க உணர்ச்சிகரமான கோஷங்களையும், உச்சாடனங்களையும் கையாளாத கண்ணியமான அரசியல்வாதி. அவருக்கு உண்மை, தேசம், மொழி, மக்கள், சமத்துவம் என்பனவே இதயதாகம். தியாகராசா அவர்கள் சிறு வயது முதல் தமது தந்தையாரிடமிருந்தும், கல்விபெற்ற பாரத நாட்டிடமிருந்தும் கண்டதும் கேட்டதும் இவையேயாம் !

# Memorandum sent to the Hon. Prime Minister Re-produced

*A. Thiyagarajah M A, M.Litt.,*
*M. P. for Vaddukoddai*

*Karainagar,*
*20. 12. 1974.*

*The Honourable Prime Minister,*
*Colombo.*

Madam,

## Removal of Difficulties Experienced by the Tamil - Speaking People of Sri Lanka.

I wish to place before you some of the practical difficulties experienced by the Tamil-speaking people of Sri Lanka in their day-to-day life so that their removal by you will promote national integration and contribute to the greater well-being of all. This will make your mighty effort achieve greater heights; I shall enumerate them under language, development and recruitment.

### Language

a. **Correspondence:** All correspondence by the Government with its citizens should be in the language they know;

b; **Administration:** All administration in the Northern and Eastern Provinces in the provincial level should be in Tamil barring those with the Centre.

c, **Central Government:** There should be a Tamil Division in each department at the centre to facilitate administration;

d; **Courts:** All Courts in the North and East shall function in Tamil in all respects by constitutional fiat.

e. **Public Servants:** All Technical Officers and Minor Employees of Government and Corporations, Bank and Local Government shall be exempt from Sinhala proficiency and the standard of proficiency for the clerical and administrative staff may be lowered.

f. **Tamil Proficiency:** All Sinhala Public Servants shall attain similar proficiency in Tamil to conduct public transactions with the Tamils who are not bound to know the Official Language.

g. **Sinhala in Schools:** The official language should be a subject of study in all Tamil Schools as it is very important.

h. **Tamil in Schools:** Tamil should also be provided as a subject of study in all Sinhala schools as it is the only other important national language. This will conform to the Three - Language Formula as in Multilingual countries like India.

i. **Abolition of English:** English should be abolished except for those who have the ability and aptitude to learn and use it for higher education. This will promote national integration very rapidly without other inducements.

## Development:

The economic development of the Northern and Eastern Provinces should receive equal attention as those of others, especially the provision of infra-structure in the East. This will help self-sufficiency and antarky in the fields of agriculture, industry and fisheries. There is no doubt that the effect on foreign exchange position will be extremely favourable.

Moreover decentralised development will reduce socio-political tensions very considerably.

## Recruitment:

The recruitment to public service and educational institutions in recent years have altered past practice to a large extent so much so criticism, both enlightened and prejudiced, have been levelled against it. A balance between the need to maintain high standards and the need to develop regions and communities should be so poised that candidates with the real hall-mark of efficiency should not be overlooked and allowed to get frustrated. This would be more harmful to the nation in the long-run than any neglect of regions or communities. Of course Colombo and Galle and Matara would suffer as much as Jaffna would. Nonetheless the District and Community bases should be allowed to operate only after the meritorious ones are given due recognition. I would not recommend a definite percentage of selection on merit first and others second, because this would vary for the different administration and educational purposes for which such a formula is sought. (There is nothing sacrosanct in a computer for it is only an agent of human device to carry out selections on a given data more quickly and less erroniously).

In the interest of national integration and well-being, to prevent frustration and disintegration, and to mobilise the nation to the utmost, I commend these suggestions for your early action.

Thanking you,

Yours Sincerely,

*A. Thiagarajah M. A., M. Litt;*
M. P. for Vaddukoddai.

# அங்குமிங்கும்

## தமிழர் பிரச்சினைகளைத் தீர்த்து வையுங்கள்

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று, வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. தியாகராசா நேற்றுப் பேரவையில் பேசும் போது கேட்டுக்கொண்டார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: "தமிழ் மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்; தமிழர் கூட்டணி, தமிழ் மக்களின் பிரச்சினைகளை அரசியல் லாபக்கருதிச் சிக்கலாக்கிக்கொண்டு வருகிறது. தமிழ் அரசியல் வாதிகளின் தவறான போக்கினால் தான் யாழ். குடாநாடு கடந்த 25 ஆண்டுகளாக அபிவிருத்தித் துறையில் பின்தங்கிவிட்டது. இனியும் தொடர்ந்து வகுப்புவாத அரசியலைக் கையாள முடியாது. வகுப்புவாதம் பேசும் தமிழ் அரசியல் வாதிகளுக்குத் தங்கள் நாட்டின்மீதோ அக்கறைகிடையாது. அவர்களுக்குத் தங்கள் சுயநல அரசியல் ஆதிக்கத்தில் தான் அக்கறை உண்டு. தமிழ் மக்கள் இப்போது வகுப்புவாத அரசியல் மாயையிலிருந்து விடுபட்டு வருகின்றனர். தமிழ் பேசும் மக்களின் மொழிப் பிரச்சினையையும் அரசாங்க ஊழியர்களின் மொழிப்பிரச்சினையையும் பிரதமர் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சர்வதேச அரங்கில் நாம் பின்பற்றிவரும் கொள்கைக்கு நல்ல வெற்றி கிடைத்திருக்கின்றது. அதற்காகப் பிரதமரைப் பாராட்டுகின்றேன், நமது அண்டை நாடான இந்தியாவோடு நாம் நமது பொருளாதார கலாசார, வர்த்தக உறவுகளைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும், கைத்தொழில் துறையில் கூட்டு முயற்சிகளை விரிவாக்க வேண்டும்.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்கீழ்க் குடிபெயர்ந்து செல்லும் மக்கள் தலைமன்னாரில் படும் கஷ்டங்களைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

(வீரகேசரி 17-10-70)

## திறமைகள் வீணாகக் கூடாது

தகுதிவாய்ந்த மாணவர்களுக்குப் பல்கலைக்கழகத்தில் இடம் கிடைக்கவில்லை. ஏற்கனவே அனுமதிக்கப்பட்டவர்களுக்குப் பிரவேசம் வழங்கப்படலாம். ஆனால் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலுமுள்ள பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டாக வேண்டும். இராமநாதன் நிதியைக்கொண்டு, யாழ். வளாகத்தில் வைத்திய, பொறியியல் பீடங்களைத் திறந்து இவர்களுக்குப் பயிற்சி வழங்கலாம். இத்தகையோருக்கு வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புப் பெற்றுக் கொள்ள வழி செய்யும் வகையில் ஆங்கில மொழியில் பயிற்சியை வழங்கலாம். இது விரக்தி மனப்பான்மையைக் குறைத்துத் திறமைகள் வீணாவதையும் தடுக்கும்.

(தினகரன்)

"திரண்டு திரண்டுன் திருவார்த்தை விரிப்பார்"



நீதி அரசர் சு. சர்வானந்தா அவர்களுடனும் சட்டத்தரணி திரு. பி. துரையப்பா அவர்களுடனும்

"இம்மையே தருஞ் சோறுங் கூறையும்"



அன்பர்கள் பொன்னுடை போர்த்தி மகிழ்கின்றனர்.

## திறமைசாலிகளும் அந்நியச் செலாவணியும்

எமது திறமைசாலிகள் வெளிநாடு சென்று தொழில் புரிவதால் எமக்கு வெளிநாட்டுச் செலாவணி கிடைப்பதுடன், அவர்கள் கல்வி, தொழில் நுட்பத் துறையில் கூடிய தேர்ச்சியும் பெற்றுத் திரும்புவர். இந்நன்மைகள் பற்றித் திறமைசாலிகள் வெளியேற்றல் தொடர்பான அறிக்கையிலும் குறிப்பிட்டுளது. மத்திய கிழக்கு, ஆஸ்திரேலிய, ஆபிரிக்க நாடுகளில் இவ்வகையில் வாய்ப்புக்கள் நிறையவுண்டு.

இந்த யோசனைகள் உள்நாட்டு மக்கள் மத்தியில் விரக்தி மனோபாவத்தைக் குறைக்குமெனவும், நாட்டின் ஒற்றுமை, பரஸ்பர நல்லுறவு என்பவற்றுக்கு மேலும் உதவுமெனவும் திரு. தியாகராசா எம். பி. குறிப்பிட்டுள்ளார்.

## வடபகுதி நிலைமை

அரசியல், கலாசார பொருளாதாரத் துறைக்கு இது மிகவும் முக்கியம். விவசாய சுயபூர்த்திக்கு உதவும் வடபகுதி நிலைமையை மூன்றால் பிரிக்கலாம்; ஒன்று மொழி, மற்றது அபிவிருத்தி, மூன்றாவது வேலைவாய்ப்பு.

சென்ற மூன்றரை வருட காலத்திலும் அப்பகுதிக்குச் செய்யப்பட்ட சேவைகள் மிகவும் குறைவானவையே, அளிக்கப்பட்ட பல உறுதிகள் நிறைவேற்றப்படாமல் விடப்பட்டுவிடுகின்றன. இதற்கு அங்குள்ள அரசியல்வாதிகளும் காரணம் என்றே கூறுவேன்

## அரசியல் பாடம்

சபாநாயகர் — உங்கள் பேச்சை உடுவில் அங்கத்தவர் ஒரு மாணவன் மாதிரிக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

திரு. தியாக — நான் இளைப்பாறிவிட்டேன். அதனால் சரிவர அவருக்கு என்னால் புகட்ட முடியுமா?

## வழிகாட்டி

வடக்கிலுள்ள அரசியல் கட்சிகள் யதார்த்த ரீதியில் இயங்க வேண்டும்; உண்மையான நிலையை உணர்ந்து செயற்பட வேண்டும்; அது ஒரு சிறிய இயக்கம். கவர்ச்சிச் சுலோகங்களினாலும், உணர்ச்சி உரைகளினாலும் தவறான வழிக்கு மற்றவர்களை அழைத்துச் சென்றுவிடக் கூடாது

## அரசின் கடமை

தமிழ் மக்களுக்குள்ள குறைகளை நீக்கவேண்டும்: இதை நிபந்தனையாக இங்கு கேட்க வில்லை. இதற்காகச் சத்தியாக்கிரகம் செய்யவுமில்லை கறுப்புக் கொடியைப் பிடிக்கவும் இல்லை; அரசாங்கத்தின் கடமையென்றே இதைக் கருதுகிறேன்;

மொழிப் பிரச்சினைக்குக் காரணமாக இருந்தவர்கள் அரசியல்வாதிகளும் தான்.

சிங்களக் குழந்தைகள் தமிழையும், தமிழ்க் குழந்தைகள் சிங்களத்தையும் படிக்க வேண்டும். ஆனால் அதைக் கட்டாயமாகப் படிப்பிக்க வேண்டுமென நான் சொல்லவில்லை: இப்படிப் படிப்பதனால் தான் ஒருமைப்பாட்டை அடைய முடியும். சிங்கள அதிகாரிகள் தமிழை அறிந்திருப்பது அவசியம் என்றே வற்புறுத்திக் கூறுகிறேன்.

(தினகரன் 19·11·74)

உ

## நன்றி கூறுகின்றோம்

- ஆசிகள் நல்கியும் கட்டுரை, கவிதைகள் தந்தும் மலரை அழகுபடுத்திய பெருமக்களுக்கும்,
- அரும் பொருள் தந்து ஆதரித்த நன்மக்களுக்கும்,
- ஒத்துழைப்பு ஈந்து ஊக்கி உதவி புரிந்த அன்பர்களுக்கும்,
- அதி விரைவில் மலரினை அழகுபட அச்சேற்றி அளித்த யாழ்ப்பாணம் சைவப்பிரகாச அச்சியந்திரசாலையினர்க்கும்,
- ஆவலோடுதவிகள் புரியும் இளைய தலைமுறையினர்க்கும்

எமது உளங்கனிந்த நன்றிகள்.

— மலர் விழாக் குழுவினர்



## மணி விழா மலர்க் குழு

திரு. எஸ். நிறசிங்கம்
,, ச. விசுவநாதர்
,, கி. வைரமுத்து
,, எஸ். ஆர். எஸ். தேவதாசன்
,, வி. ஏகாம்பரமூர்த்தி
‘ நாவேந்தன் ’
,, க. மயில்வாகனன்

சைவப்பிரகாச
அச்சியந்திரசாலை
யாழ்ப்பாணம்.

பல்லாண்டு வாழ்கென
வாழ்த்துகின்றோம்.

பண்டத்தரிப்புப் பிரிவு
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
பண்டத்தரிப்பு.

---

மணிவிழாக் காணும்
தியாகராசா தம்பதிகட்கு
எமது வாழ்த்துக்கள்.

[illegible]
பலநோக்குக்
கூட்டுறவுச் சங்கம்,
இயக்குநர் சபை - பணியாளர்கள் -
உறுப்பினர்கள்.